Registered No. 3429.

12-வது தொகுதி. 3-வது புத்தகம்.

உ

சிவமயம்.

திருக்குறட் குமரேச வெண்பா.

(மூலமும்—உரையும்.)

ஆசிரியர்

ஜெகவீரபாண்டியன்.

தூத்துக்குடி

வேலாயுதம் பிரிண்டிங் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றன.

All rights.] 1937. [*Reserved.*

தரும தீபிகை

தான்பிறந்த தாய்மொழியைச் சார்ந்து நன்கு கல்லாது
கான்பறந்து வேறொன்று கற்றுநிற்றல் — வான்பிறந்த
ஆடை புனையா தணியணிந்து நோக்குதல்போல்
பீடை பெருகும் பிழை.

இ—ள்.

இது, தாய்மொழிப் பயிற்சியின் தகவுரைக் கின்றது.

சார்ந்து நன்கு கற்றல் = நல்லாசிரியரை யடுத்து வரன்முறையாகப் பயின்று தெளிதல். கான் = அயலிடம். இயல்பான நாட்டு மொழியை விட்டு அயலான காட்டு மொழியை விழைந்து கடுகிச் சேறலை நோக்கிக் கான் பறந்து என்றார். வேறு ஒன்று = மற்றொரு மொழி; அந்நிய பாஷை யை என்க. ஒன்று என உபேக்ஷையோ டுரைத்தது அதன் அபேக்ஷை யின்மை தெரிய. வான் = பெருமை. ஆடையானது மானம் காத்து மகிமைப்படுத்தும் ஆதலால் அது "வான் பிறந்த" என நின்றது. தான் பிறந்த நாட்டிற் குரிய இனிய மொழியை உரிமையோடு உவந்து கல்லாமல் அயல்மொழியை அலந்து கற்றல் அரையில் உடை யுடுக்காமல் உடலில் அணியணிந்து உள்ளங் களிப்பது போன்றதொரு எள்ளற் பாடாம் என்பதாம.

வீட்டு மொழியைத் தாய் மொழி என்றது இயற்கை இனிமை எளிமை தெளிவு உரிமைபெருமை முதலிய உறுதி நலங்களை நோக்கி. அதனை ஆடையாகக்குறித்தது இன்றியமையாத அதன் இயல்பு கருதி.

ஆடையில்லாமல் நிருவாணமாயுள்ள ஒருவன் காதிலே கடுக்கன், கையிலே மோதிரம், கழுத்திலே சரப்பளி முதலியவற்றை அணிந்துகொண்டு வெளியே போவானாயின் அவன் எவ்வாறு இளிவாக எண்ணி எள்ளி நகைக்கப் படுவானோ அவ்வாறே சுய பாஷையை உள்ளுற நன்கு கல்லாமல் அந்நிய பாஷையை மேற் கொண்டு துள்ளி நிற்பவன் எள்ளற்பாடுடையனா யிழிவன் ஆதலால் "நிற்றல் பீடை" என்றார்.

பீடை = துன்பம். பிழை பெருகும் என்றது வழிதெரியாமல் களிமிகுத்து நிற்கும் அவர்தம் பழி மிகுதி கருதி.

ஆடைக்குப்பின் அணி என்றபடி தன் மொழியைத் தகவுடன் கற்ற பின் என் மொழியையும் இயல்புடன் கற்கலாம் என்க. ஆடை அணி என்ற உவமைகளால் பொருள் நிலைகளை யூன்றி யுணர்ந்து அவற்றின் அருமை பெருமைகளைத் தெளிந்துகொள்க.

ஆடை யுடையவன் அணி யணிந்து கொண்டால் யாண்டும் எழில் மிகுந்து பீடு பெறுவன்; அதுபோல் தனக்குரிமையான தாய் மொழியை முதலில் நன்கு கற்றறிந்து அதன்பின் வேறு பாஷைகளை விளங்கக் கற்றவன் எங்கும் மேன்மையாளனாய் விளங்கிப் பொங்கிய புகழோடு பொலிந்து நிற்பன் என்க.

ஒவ்வொருவரும் தத்தமக்குரிய தாய்ப்பாஷையை முந்துறக் கற்றறிந்துகொள்ள வேண்டும் என்பது கருத்து.

உ

அநுதாபக் குறிப்பு.

எனது அருமை மனைவி வெள்ளைத்தாய் கார்த்திகை மாதம் உ௰௧-ந் தெய்தி (6—12—36) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குப் பரகதி யடைந்தாள். கர்ப்பவதி; இதுபொழுது மாதம் 8; முதல் நாள் சனிக்கிழமை மாலை 5 மணிக்குப் பையனுக்கு மறைசை யந்தாதியை நான் பாடம் சொல்லிக் கொண்டிருந்த பொழுது உடனிருந்து உவந்து கேட்டாள்.

> " என்றுடலை யொன்று காலனைத் தாக்கி எழிற் கனக
> மன்றுடலைச் செய்து வான்பரவைப்பெயர் மண்ணும் விண்ணும்
> சென்றுடலைக்கடை வாயிற்படியினும் சேர்ந்து வைகும்
> உன்றுடலை வைப்பது மறைக்காட்டி லுறை பரனே.' (மறைசை 3)

என்னும் இக் கவிக்குப் பொருள் சொல்லி வருங்கால் ஊன்றிக் கவனித்தாள். சொல்லணியில் வைத்துப் பக்திச் சுவை பொருந்தப் புலவர் நன்கு பாடியிருக்கிறார் என்று நூலாசிரியரது புலமையையும் நிலைமையையும் வியந்து மகிழ்ந்தாள். பாடம் முடிந்து எழுந்தோம். இரவு 8 மணிக்கு இருந்தாற்போலிருந்து திடீரென்று "எனக்கு ஒரு மாதிரியாக வருகிறது; நெற்றியைத் தொட்டுப் பாருங்கள" என்றாள். பார்த்தேன்; சிறிது குளிர்ந்திருந்தது; விபூதியை நிறையப் பூசினேன். அயர்ந்து படுத்தாள்; அமைதியாயிருந்தாலும், அபாய நிலை அதிகமாயது. உடனே சிவில் சர்ஜன் முதலாக டாக்டர்கள் பலர் வந்து பார்த்தார்கள்; பரிந்து முயன்றார்கள்; ஒன்று முடியவில்லை; முடிந்துபோனாள். ஒரு நோயுமின்றிப் பெரு மாயமாய் மாய்ந்தாள். "வாழ்வாவது மாயம்" என்னும் உறுதிமொழியை யுறுதிசெய்தாள். திருக்குறட் குமரேச வெண்பா என்னும் இவ் அரிய பெரிய நூல் இனிது முடிய வேண்டுமே என்று நாளும் எதிர்பார்த்திருந்தவள் அதன் முடிவு காணாமல் தன் முடிவு கண்டாள். கண்ட நூல் முடியுமுன் கொண்ட நூல் முடிந்ததே யென்று குலை நடுங்க நேர்ந்தது. பெயரியல்புக்கேற்ப உருவும் அறிவும் அமைந்து உழுவலன்போடு ஒழுகி

வந்த. ஒரு திருவை யிழந்தது பெரிய இழவாகவே தோன்று கின்றது. வாழக்கையின் ஒளியும் வனப்பும் மழுங்கியுள்ளன. எனது நூலாராய்ச்சி முதலிய மேலான நிலைக்குச் சாலவும் துணையா யிருந்தாள். இவளுடைய உத்தம குணங்க ளெல்லாம் ஒருங்கு திரண்டு உருக்கொண்டு புகுந்து என் உள்ளத்தை உருகச் செய் கின்றன. என்செய்வது?

" யாங்குப் பெரிதாயினும் நோயளவு எனைத்தே ?
உயிர்செகுக் கல்லா மதுகைத் தன்மையிற்
கள்ளி போகிய களரியம் பறந்தலை
வெள்ளிடைப் பொத்திய விளைவிற கீமத்து
ஒள்ளழற் பள்ளிப் பாயல் சேர்த்தி
ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை
இன்னும் வாழ்வல் என்னிதன் பண்பே?" (புறம் 245)

எனத் தன் துணைவியை யிழந்தபொழுது முன்னொரு மன்னன் சொன்னது என்னது என்பது இன்னே தெரிந்தது. எத்துணைத் தெள்ளியாரையும் உள்ளமுருக்கி உலையச்செய்யும் பொல்லாத்துயரம் ஒல்லையில் வந்தது; இனிச் சொல்லியாவது என்? வள்ளிமணாளன் போட்ட புள்ளி யிதுவென்று உள்ளி யமர்ந்துளேன்.

நேரிசை வெண்பா.

அன்புடையாய்! ஆன்ற அறிவுடையாய்! யாண்டும் யான்
இன்புடையான் என்ன இனிதிருந்தாய்—துன்படைய
இன்றெனைநீ விட்டகன்றாய் என்றினிநான் காண்பேனோ
நன்றுடைய நங்காய்! நவில். (க)

வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கும் மெய்த்திருவாம்
வெள்ளைத்தாய் இன்னருளை மேவிநின்றேன்—வெள்ளைத்தாய்!
உன்னன்பும் பெற்றுள் ளுவந்திருந்தேன் இன்றிழந்தேன்
என்னோவாழ் வன்னோ இனி. (உ)

திருவள்ளுவர் நிலயம்,
தூத்துக்குடி.

ஜெகவீரபாண்டியன்.

அன்பர்களனுப்பிய அநுதாபக் கடிதங்களில் கவிகளா வந்தவற்றுள் சில அடியில் வருவன.

திருச்செந்தூர் வித்துவான், பிரம்மஸ்ரீ மு. கிருஷ்ண சர்மா அவர்கள் இயற்றியன.

கவிராஜ பண்டிதர், ஸ்ரீமான் ஜெகவீர பாண்டியனார் தலைவி

வெள்ளைத்தாயம்மையார் சரம கவிதை.

தாதுவினிற் கார்த்திகையைச் சாரிருபத் தோராநாள்
ஆதியெனும் வாரம்பின் அட்டமியாம்—கோதிறமிழ்க்
கல்விக் கடற்கரையைக் காண்பாண்டியன் மனைவி
நல்வீடு பெற்றதொரு நாள். (க)

தோகைமாமயிலைக் குலஇனம் பிடியைத் தாய்மலர்க் கொம்பினைக் கணவற்கு
ஓகையேவிளைக்கும் நறுஞ்சுவைக் கனியைஉயர்குணப் பாண்டியனென்னும்
சாகைமேற் படர்பொற் கொடியினை வெள்ளைத் தாயினைத் தகையறிந் துரை
த்தல், மூகைநால் வேதமுதலியகலையின் முழுஉரைவிரித்தல்போன்றிடுமே

மாசுதவிர் உத்தமப் பத்தினிப் பெண்டிர்க் குரியநலன் வாய்க்கப் பெற்றுப்
பேசுபுகழ் முருகன்போல் திருமகள்போல் நன்மக்கள் பிறங்கத் தந்து
நேசமுடை நாயகனே தெய்வமென எப்போதும் நினைந்து வாழ்ந்த
தேசுபெறு **வெள்ளைத்தாயம்மையின்** *சீர் சில பாவாற் செப்பற்பாற்றே.* (௨)

பெண்ணினத்துக் கோரெடுத்துக் காட்டாகி வருவிருந்து பேணிக் காத்துக்
கண்ணை ஒத்த தன்கணவர், உளங்கோணு வாறவர்சொற் கடைப்பிடித்துத்
தண்ணளியும் பெருங்குணமும் அடக்கமும்சார்ந் தவிர் வெள்ளைத்தாயாந்
தாயை; எண்ணுதொறும் கலுழ்ந்திரங்கு தமர்கள்தமக் காறுதலை எவர்
சொல்வாரே ? (௩)

தற்காத்துத் தற்கொண்டாற் பேணிஎனத் தமிழ்மறை நூல் சாற்றியுள்ள
சொற்காத்துத் துணைவன்றன் உடல் காத்து மக்கடமைத் துலங்கக்காததும்
இற்காத்து நிறைகாத்த வெள்ளைத்தாயம்மையின் கற்பென்னும் தெய்வம்
கற்காத்த தோளுடையான் பாண்டியனார் குலத்தை என்றும் காக்குமன்றே.

ஆருயிரின் வரவும் அது செல் கதியும் இவைமுதல அறிந்து கூறும்
சீருறுநூல் பற்பல தேர்ந்ததனுணுக்க முதற் பிறவும் தெளிந்து மெய்ம்மை
தேருமுளப் பாண்டியனை யாம் தேற்று முயற்சி கொல்லத் தெருவினூடே
கூருறு ஊசியை விற்றல் போலுமென உணர்ந்தமைதி கொள்வாமன்றே.

ஒத்த நலன் ஒத்த எழில் இத்தகைய நாயகனோ டொருங்கு சார்ந்து,
சித்த மகிழ்ந் தில்லறத்தைக் காத்த வெள்ளைத்தா யென்னும் செல்வி தன்னை
வித்தையெலாம் கற்றிடுமெம் பாண்டியனா ரிடை நின்று வேறாச் செய்த
சித்தமிலாக் கூற்றுவற்குத் தருமனெனும் பெயர் புனைந்து சென்றார் யாரே?

புலவர்கள் தம்பெருமையினை உணரறிவும் மிகுபொருளும் பொருந்து மேலைப்
புலமதனில் * அதற்கிணையாய் கீழைநா டதனில், நனி பொன்னையீட்டும்
தலமெனுங் கீழ்க்குடகோள நாட்டினிலிப் பாண்டியனார்சனித்துள்ளாரேல்
பலகோடிக கிறைவனுமாப் பரிசுபல உடையனுமாப் பார்ப்பாம் அன்றே;(அ)

அப்பெரிய ஜகவீர பாண்டியனைத் தன்கணவ ராகப் பெற்ற
செப்பரிய பண்புடைய வெள்ளைத்தாய்க் கெந்தமிழர் செய்யும் நன்றி
மைப்படியும் கண்ணா ளன்னாளுருவை வெண்கலத்தும் வண் கல்லாலும்
ஒப்பவியற் றிப்பெரிய நகர் தொறுமூர் தொறு நாட்டி உவத்தலொன்றே.

இத்துணைய இசையுடைய வெள்ளைததா யம்மையின் பேர் இனிது வாழ்க;
அத்தகையாட் கைப்பிடித்த பாண்டியனார் புகழ் தமிழுள்ளளவும் வாழ்க;
வைததநிதி யனைய இவர் புதல்வரொடு மருகியரும் மகிழ்ந்து வாழ்க;
நத்துமிவர் மருகரொடு புதல்வியரும் இன்புடனெந் நாளும் வாழ்க. (௯)

திருச்செந்தூர். 11–12–36. மு. கிருஷ்ணசர்மா.

* மேலைப்புலம் = ஐரோப்பா. கீழைநாடு = ஜப்பான். குடகோளம் = அமெரிக்கா.

அம்பாசமுத்திரம், பொன்னம்பலசிவம் அவர்கள் இயற்றியது.

வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கும் வெள்ளைத்தாய்
அள்ளித் தரக்கொண் டருள்வள்ளால் !—வெள்ளைத்தாய்
அம்மையுடல் நீததது வும் ஐயனடி சேர்ந்ததுவும்
வெம்மையொடு செம்மைதந்த வே. (க)

ஒட்டநத்தம், பொன்னுச்சாமி இயற்றியன.

எனக்கினிய மூத்த என்னக்காள் அந்தோ
மனக்கவலை தந்து மறைந்தார்—தனக்கினிய
தாரந்தா னீங்கத் தயங்குந் தமிழ்க் கடலே!
நேரந்தான் எப்படிப்போம் நின்று. (க)

குஞ்சுகளைத் தாயணைக்கும் கொள்கைபோல் எங்கடம்
அஞ்சுதலைக் காத்தளிக்கும் அக்காவே—அஞ்சாவென்
நெஞ்சும் தீ யிட்ட நிணம்போ லுருகுகின்றேன்
தஞ்சமற்று நின்றேன் தவித்து. (உ)

ஆறு முகங்கள்போல் ஆனகுல மக்களைநீர்
வேறு பிரிந்தெங்கு மேவினீர்—வீறுடைய
மன்குலத்தில் வந்த மதிக்கொழுந்தே ! யாரினிமேல்
உன்கொழுநற் காப்பா ருணர்ந்து. (ங)

என இன்னவகையாயிதம்பெறநின்று நன்னயமாக அவள் நளினமுடன் கேட்டாள். புதிய ஓர் சுனையில் இனிய நீராடினேன்; இனையவாறுயது; என இவள் எதிர்மொழி தந்தாள். உடுத்த ஆடை நனையாமல் நீ மடுத்து ஆடிய அம் மாயச் சுனை எங்கே? என அவள் வாயை வளர்த்தாள். அதனை நீ காணமுடியாது; சேணிடை யுள்ளது; என்று இவள் நாணமொடு நகைத்தாள். இன்னணம் நகையாடிப் போனபின் அம்மன்னன் வந்து எண்ணரிய சீருடன் யாருமறிய இவளை மணந்துகொண்டான். அத் திருமகன் தனக்கு மருகனுயமைந்ததை நினைந்து இவளுடைய தந்தை உளமிகவுவந்து அரிய வரிசைகள் பல ஆர்வமொடு தந்தான். இவளோடெழுந்து தனது அணிநகரடைந்து அலகில் போகங்களை நுகர்ந்து அவனி யின்புற அவன் அரசுபுரிந்துவந்தான். வருங்கால் வானவருக்கும் தானவருக்கும் வன்சமர் மூண்டது. அவ் அமர்முனையில் அமரரை ஆதரிக்க அவன் ஆர்வமொடு சென்றான். இவள் அல்லலுழந்து தனியே அலமந்திருந்தாள். அவன் வரவையே விழைந்து நாளு மறுகியிருந்த இவளை மஞ்ஞேசிகை என்னும் செவிலி ஒருநாள் நெருங்கி அவ்விழைவொழிந் திருப்பின் சிறிது ஆறுதலாமெனத் தேறுதல் கூறினள். அந் நசையினுலேதான் இந்நிலையிலாவது என்னுயிர் நண்ணியுள்ளது இல்லையேல் விண்ணுல கெய்திவிடும் என இவள் உண்மையை யுரைத்தாள். “உரன் நசைஇ உள்ளந் துணையாகச் சென்றார் வரல் நசைஇ யின்னும் உளேன்” என்பதை உலகம் காண இவள் உணர்த்தி நின்றாள்.

வருவரேன் றெண்ணி வழிமேல் விழிவைத்
தொருவா திருந்தே னுயிர்.

காதலியின் உயிர்நிலை இதனால் கூறப்பட்டது.

1264. காமர் சுநீதையேன் காமமீக் கூர்ந்துநின்றாள்
கோமகனை நாடிக் குமரேசா—ஏமமுறக்
கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகோ டேறுமென் னெஞ்சு. (ச)

இ—ள்.

குமரேசா! பிரிந்துசென்ற கணவனையே நினைந்து நினைந்து

சுநீதை ஏன் காமமீக்கூர்ந்து கலுழ்ந்திருந்தாள்? எனின், கூடிய காமம் பிரிந்தார் வர உள்ளி என் நெஞ்சு கோடு கோடு ஏறும் என்க.

வரவு உள்ளி = வருதலை நினைந்து.

கோடு = கொம்பு; மரக்கிளை. அடுக்கு பன்மை குறித்து நின்றது. பல கிளைகளிலும் ஒன்றன்மேலொன்முய்ப் பாய்ந்து தாவி உச்சியில் ஓடுகின்ற தென்றவாறு.

உழுவலன்போடு தழுவி அளவிலின்பங்களை நுகர்ந்துவருங் கால் அவற்றை உதறி விடுத்து முயற்சிமேல் முனைந்து சென்ருஞதலால் அச்செலவு நிலையின் அருமையை வியந்து கூடிய காமம் பிரிந்தார் என்ருள். இங்ஙனம் பிரிந்து போன அவர் விரைந்து வருவர் என நினைந்து நினைந்து உள்ளம் துள்ளி உச்ச நிலையில் உள்ள தென்றவாறு.

முன்பு கூடி மகிழ்ந்த காமநலத்தைத் துறந்து போனவர் மீண்டு வருதலை நினைந்து என் நெஞ்சு மேன்மேல் நிமிர்ந்தெழு கின்ற தென்பதாம்.

சேணிடை நீங்கிய நாயகன் வருகையை வேணவாவோடு பேணிநின்ற தலைவி தன் நெஞ்சு நிலையை உணர்த்தியபடி யிது.

நெடுந்தூரத்தில் வருபவரை உயர்ந்த மரத்தின் உச்சிமேலேறி நச்சிப் பார்ப்பதுபோல் இவள் மனம் ஆவலோடு மேலும் மேலும் தாவிக் காதலன் வரவையே நாடி நீடி நின்றது ஆதலால் "என் நெஞ்சு கோடு கோடு ஏறும்" என்ருள்.

காதலன் வருகையை நினைந்து காமம் கதித்தெழும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சுநீதைபால் உணரப்படும்.

கதை.

சுநீதை என்பவள் கனிதரன் எனனும் குறுநில மன்ன னுடைய அருமைத் திருமகள். பெண்மை நிலைக்கோர் உண்மை நிலையமா யிவள் ஒளிசிறந்திருந்தாள். இவளது எழில்நிலையை வினவியறிந்து அங்கன் என்னும் அரசிளங்குமரன் அளவிலாவ லோடு உளமுருகி நின்ருன். அவன் சூரியகுலத் தோன்றல். உன்முகன் என்னு முடிமன்னனுடைய அருமைத் திருமகன்.

சாக்குச மனுவிற்குப் பத்தாவது தலைமுறையில் வந்தவன். உத்தம குணங்கள் யாவும் ஒருங்கமையப் பெற்றவன். உலகமுழுவதும் பொதுவற வுடையனாய் அலகில் புகழோடு நிலவி நின்றவன். "ஆழிசூழும் அகனிலம் ஏழினும், ஆழியொன்று செலுத்தினன் அங்கனே" என இங்ஙனம் எங்கும் இசைபெற்று நின்ற அவன் இவள்மேல் பொங்கிய காதலனாய் வந்து மங்கலமுறையோடு மணம் புரிந்துகொண்டான்.

"வந்த ஆதி மனுமுதலாக ஈ
ரைந்தென்றோது தலைமுறையான் அங்கன்
விநதை சேர்புயன் வேட்டனன் வாண்முகம்
இந்து நேருஞ் சுநீதையை என்பவே." (பாகவதம்)

இவ்வண்ண மணந்துகொண்டு இவ் அணங்கோடமர்ந்து அரிய போகங்களை நுகர்ந்து அவன் ஆர்வமீதூர்ந்தான். அவனுக்கு இன்பநிலையமா யினிதமர்ந்திருந்து இவள் அன்பாற்றி வந்தாள்.

"வாசமார்மாலை மன்னவன முன்னாள் மருவிடா வெகுளியின் மலைந்து
பூசல்வேள் பலகா லெய்த புண்ணுக்குப் புணர்முலை வேதுகொண்டொற்றி
மாசிலாமணி செய் சூடகக் காந்தள் மலர்க்கரம் ஆகமேற் கட்டி
ஆசைநோய் தீர அமுதவாயுதகம் அளித்தனள் அரிவையர் பெருமாள்.

கண்டகண் வாங்கா திருவருமதனாற் கலவியும் புலவியும் விளைந்து
முண்டக வதனம் வெயரரும்பிடினு முகிழ்முலை வடமசைந்திடினும்
கொண்டலங் குழலில் வண்டலம்பிடினும் குறைவிலா நிறையிடரெய்தி
மண்டலத் தரசன் சிநதையம்மங்கை மருங்குலின் ஒருவழித்தன்றே.

தானைசென்றார்க்க, மங்கலமிடற்றுச் சலஞ்சலம் புலம்பிடத், தனககோட்
டானை சென றடா, மாத்தலைமயங்க, அல்குலந்தேரினைச் செலுத்தி
மீனைவென் றடுகண் வேல்படப் புருவவில் வளைத்தயோத்தியர் வேந்தைத்
தேனைவென் றினித்தசெஞ்சொலாளின்பச்செருத்தொழில்பற்பல
[விளைத்தாள்."

என்றபடி இவள் விளைத்துவர அவன் திளைத்திருந்தான். இங் ஙனம் இருந்துவருங்கால் வாள்வினையோடொன்றிய ஆள்வினை யொன்றில் அவன் அகல நேர்ந்தது. இவள் கவலைகூர்ந்து கலுழ்ந் திருந்தாள். இரவும் பகலும் அவனையே கருதி மறுகிக்கிடந்தாள். அவ்வள்ளல் வருகையையே உள்ளித் தன் உள்ளம் ஓயாது துள்ளி

யெழுகின்ற நிலையைத் தோழியிடம் ஒருநாள் இவள் வெள்கி யுரைத்தாள். "பிரிந்தார் வர உள்ளி நெஞ்சு கோடு கோடேறும்" என்பதை உலகம் காண இவள் உணர்த்திநின்றாள்.

அணைகடந்த வெள்ளம்போ லாருயிரு நெஞ்சும்
துணைநினைந் தோடுந் துனைந்து.

நெஞ்சு நீடிய நிலை இதனால் கூறப்பட்டது.

1265. காதலனைக் கண்டபின்பே காமர்சீ மந்தனிதன்
கோதகன்றாள் என்னே குமரேசா—ஏதமறக்
காண்கமற் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்
நீங்குமென் மென்றோட் பசப்பு. (ரு)

இ—ள்.

குமரேசா! காதலனைக் காணாமல் கலுழ்ந்து கிடந்த சீமந்தனி கண்டபின்பு ஏன் பசப்பு நீங்கி மகிழ்ந்துகொண்டாள்? எனின், கண் ஆரக் கொண்கனைக் காண்கமன்; கண்டபின் என் மென் தோள் பசப்பு நீங்கும் என்க.

காண்க = காண்பேனாக. வியங்கோள் வேண்டுகோட் பொருளில் வந்தது. காணவேண்டும் என்பது கருத்து.

கண் ஆர = கண்கள் நிறைய. காட்சியில் தனக்குள்ள ஆர்வ நிலை இதனால் அறிய நின்றது. கண்டபின் நீங்கும் என்றதனால் காணுமுன் யாதும் நீங்காதென்பதாயிற்று. கேட்டதனால் மட்டும் வாட்டம் போகாதென்றவாறு.

என் கண்களார எனது கணவனை நான் நன்குகாணவேண்டும்; அவ்வண்ணம் கண்டபொழுதுதான் என் மெல்லிய தோள்மேலடர்ந்த பொல்லாத பசப்பு நீங்கும் என்பதாம்.

நாயகன் வரவையே விழைந்து நாளும் நைந்திருந்த தலைவியைத தோழி நெருங்கி "அவர் விரைந்துவந்தருளுவார் நீ வீணே நொந்துழலாமல் சிந்தை தேறியிரு" என மூந்துற ஆறுதல் கூற அவ்வமயம் அவளை நோக்கி இவள் கூறியவாறிது.

அவர் வருவர் என்று சொன்னதைக் கேட்டவுடனேயே என் உள்ளம் உவந்து துள்ளுகின்றது; ஆயினும் அவரைக் கண்ணாரக் கண்டபின்புதான் நான் கண்ட துயரமெல்லாம் நீங்கிப்பண்டுபோல் ஒளி சிறந்து என் உயிர்மகிழும் என்பாள் "மென்தோள் பசப்பு, கண்டபின் நீங்கும்" என்றாள். "வானுயர் வெற்பன் வருவான் கொல் என் தோழி, மேனி பசப்புக் கெட்" (திணைமொழி 4 என்பதும் காண்க.

பிரிவாற்றாமையால் உடல்மெலிந்து பசந்து கிடந்தாளாதலால் அப்பசப்பு நிலையை இங்குக் குறித்து நின்றாள். உடையவன் அடையவந்த பொழுதுதான் உடல் மெலிவகன்று எழில் வடிவமைந்து உளமிக மகிழ்ந்து குலமகள் நிலவிநிற்பள் என்பதாம்.

"தோள்கவின எய்தின; தொடிநிலை நின்றன;
நீள்வரி நெடுங்கண் வாள்வனப் புற்றன;
ஏந்து கோட்டி யானை வேந்துதொழில் விட்டென
விரைசெலல் நெடுந்தேர் கடைஇ
வரையக நாடன் வந்த மாறே." (ஐங்குறு நூறு 498)

காதலன் வந்தவுடன் காதலி நின்ற நிலையை இது குறித்திருத்த லறிக. உடையவன் இன்றேல் உடல் நிலை குன்றும் என்க.

கையகன்ற கணவனைக் கண்டபொழுதுதான் உய்திகொண்டு மனைவி உவந்து நிற்பள் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சீமந்தனிபால் உணரப்படும்.

கதை.

சீமந்தனி என்பவள் சித்திரவர்மன் என்னும் அரசனுடைய அருமைத் திருமகள். பெருந்தவத்தால் பிறந்தவள். பேரழகும் பெருங்குணங்களும் ஒருங்கமையப்பெற்றவள். இவளது எழில் நிலையை வினவியறிந்து நிடத தேசத்து வேந்தனாகிய சந்திரசேனன் என்பவன் விழைந்துவந்து முந்துற இவளை மணந்துகொண்டான். அக்கட்டழகனோடமர்ந்து கருதிய போகங்களை நுகர்ந்து யாதும் விட்டகலாமல் இவள் விளங்கியிருந்தாள். இவரது இன்பநுகர்ச்சி உழுவலன்போடு ஒன்றியிருந்ததாதலால் அளவிலா நிலையில் நிலவி நின்றது. உடலும் உயிரும் ஒருவாது மருவி விடலரும் போகம் இங்ஙனம் பருகிவருங்கால் ஒருநாள் மருவலர்மேல் அவன் முறுகி

அகன்றான். இவள் பருவரல் கூர்ந்து மறுகியிருந்தாள். ஆண்டு மூன்றாகியும் அவன் மீண்டுவாராமையால் இவள் அரும்படருழந்து அலமந்து கிடந்தாள். அயிற்சுவை துறந்து, துயிற்சுவை மறந்து, அல்லும் பகலும் அழுது மெலிந்து, எல்லையில் பசலை எங்கும் படர்ந்து, தொல்லை வெம்பிரிவு ஓர் புல்லிய வுருவாய், அல்லல் நிலையிலழுந்தியதாமெனச் சொல்லருந் துயரொடு துழங்கியிருந்த இவளைத் தேசிகை என்னும் தோழி நாளும் ஆசைகூறி ஆற்றி வந்தாள். திங்கள் பலகழிந்தும் அவர் வந்தருளவில்லையே; எங்ஙனம் இங்குத் தங்கியிருப்பேன்? இனிச் சாதலேயன்றி நோதலும் இல்லை என்று முடிவில் இவள் நொந்து மொழிந்தாள்.

"பொன்னேர் மேனி நன்னலஞ் சிதைத்தோர்
இன்னும் வாரார் ஆயின்
என்னும் தோழி! நம் இன்னுயிர் நிலையே?"

எனத் தன்னிலையழிந்து இவள் தவித்து நின்றாள். இந்நிலையில் அம்மன்னன் வந்தான். வருங்கால் இடையே அனுரதன் என்னும் குறுநில மன்னன் அவனை எதிர்கொண்டழைத்துத் தனது இனிய நகரில் இருத்தி ஓர் பெருவிருந்து செய்தான். அங்கு அவன் தங்கியிருப்பதைத் தூதரிருவர் வந்து இங்கு முந்துற உரைத்தார். தோழியரும் செவிலியரும் வாழி என்று வந்து இவளை மகிழ்ந்துபசரித்து அண்ணல் வந்தருளினர்; இனி யாதும் வருந்தல் என மருந்துறழ் மொழிகளால் மனங்குளிரவுரைத்தார். என் ஆருயிர்த் துணையைக் கண்ணார யான் கண்டபின்னரே என் உண்ணோய் நீங்கியுய்திபெறுவேன் என இவள் உரைசெய்து நின்றாள. பின்பு அம்மன்னவன்வந்தான்; இவள்மகிழ்ந்து தழுவி விளங்கியிருந்தாள். "கொண்கனைக் கண்ணாரக் கண்டபின் என் மென்தோட் பசப்பு நீங்கும்" என்பதை உலகம் காண இவள் உணர்த்திநின்றாள்.

ஆதவனைக் கண்டலரும் அம்புயம்போல் என்னுயிரேன்
காதலனைக் கண்டலரும் காண்.

நேரில் காண நேர்ந்தமை இதனால் கூறப்பட்டது.

1266. பண்டு பதிவரவைப் பார்த்தேனே சத்யாரதை
கொண்டுவந்து நின்றாள் குமரேசா—மண்டி
வருகமற் கொண்கன் ஒருநாட் பருகுவன்
பைதனே யெல்லாங் கெட. (சு)

இ—ள்.

குமரேசா! தன் கணவன் வருகையையே எதிர்நோக்கிச் சத்தியரதை ஏன் உருகியிருந்தாள்? எனின், கொண்கன் ஒருநாள் வருக மன் பைதல் நோய் எல்லாம் கெடப் பருகுவன் என்க.

கொண்கன் = கணவன்; மணந்துகொண்டவன் என்பதாம்.

கொண்கன் வருக என்றது வினையை முற்குறித்ததனால் அவ்வருகையில் இவளுக்குள்ள ஆர்வநிலை இனிது புலனும். வருநாள் உறுதியாகத் தெரியாமையால் ஒருநாள் என்றாள்.

பைதல் நோய் என்றது பிரிவினால் நேர்ந்துள்ள விரகதாபத்தை. "பைதல் நெஞ்சத்து மையல் கொள்ளா" (பெருங்கதை 1, 33). "பரிசழி பைதல் நோய் மூழ்கி" (நெய்தற்கலி 21). இவற்றுள் பைதல் நிலை காண்க.

பருகல் = குடித்தல். பருகுவன் என்றதனால் கலவி நிலையில் இவள் கருதியுள்ள காதல் நிலையறியலாம். நீர் வேட்கையுடையார் நீரைக் கண்டுழி வாரிக்குடிப்பதுபோல் காமவேட்கையுடையார் காதலரைக் கண்டுழிப் பரவசரா யுருகி மருவுவராதலால் "பருகுவன்" என்றாள். "பருகுகாதலிற் பாடியாடினர்" (சிந்தாமணி); "பருகுவனள்போல" (பெருங்கதை). ஆர்வ நுகர்ச்சிக்குப் பருகல் வந்திருத்தலறிக. அவன் வருமுன்னரே பருகலை நச்சி இவள் உருகியதனால் இது விதுப்பாயிற்று. "மருவி வரவுற வேண்டும் என் தோழி, உருவழி வுண்ணேய் கெட" (திணைமொழி ஐம்பது) என்பதும் ஈண்டெண்ணத் தக்கது.

இத்துணைநாளும் வாராதுள்ள நாயகன் ஒருநாள் இங்கு வருவானாக; வந்தால் இந்நோயெல்லாந் தீர நுகர்ந்து மகிழ்வேன் என்பதாம்.

நெடுநாள் வராமல் பிரிவில் நிலைத்திருந்த தலைவன் விரைவில் வருவதாகத் தூதர்மூலம் தெரிந்தவுடன் தலைவி ஆதரமிருந்து

இங்ஙனம் உரைத்தாள் என்க.

அயிலாமை துயிலாமை முதலிய அவலங்கள் முழுவதும் நீங்க அமிர்தத்தை அள்ளிக் குடிப்பதுபோல் கணவனை ஆரத் தழுவி ஐம்புலன்களும் அமைய நுகர்வேன் என்பாள் "பைதல் நோய் எல்லாம் கெடப் பருகுவன்" என்றாள்.

"படுசுடர் மாலையொடு பைதல் நோ யுழப்பபாளைக்
குடிபுறம் காத்தோம்பும் செங்கோலான் வியன்தானை
விடுவழி விடுவழிச் சென்றாங்கு அவர்
தொடுவழித தொடுவழி நீங்கின்றாற்பசப்பே" (நெய்தற்கலி 14)

நீதிமன்னன் படைவர நேரலர் கெடுதல்போல் காதலன் வரப் பைதல் நோயும் பசப்பும் நீங்கின என இஃதுணர்த்திநிற்றலறிக.

வருவர் வருவர் என முதிர் காதலோடு நாளும் எதிர்நோக்கி நின்றாள் ஆதலால்வருகஎன வியங்கோளால் வேண்டிமொழிந்தாள்.

"காய்சின வேந்தன் பாசறை நீடி
நம்நோய் அறியா அறனி லாளர்
இநநிலை களைய வருதவர் கொல்லென
ஆனு தெறிதரும் வாடையொடு
நோனேன் தோழி என தனிமை யானே." (அகம் 294)

உரியவன் வருகையை ஒருத்தி இதில் உருகி நினைந்துள்ளமையறிக.

நாயகன் வாராநாளெல்லாம் தீராநோயளாய்த் தியங்கியிருந் தாளாதலால் அவன் வந்தவுடன் ஆரநுகரும் அனுபோக நிலையை ஆராமையோடு இவ்வாறு அவாவி நின்றாள் என்க.

"பன்னெடுங்காலம் நோற்றுத தன்னுடைப் பண்பிற்கு ஏற்ற
பின்னெடுங் கணவன் தன்னைப் பெற்று இடைபிரிநது முற்றும்
தன்னெடும் பீழை நீங்கத் தழுவினள் தளிர்க்கை நீட்டி
நன்னெடும் பூமி யென்னும் நங்கைதன் கொங்கை ஆர."
(இராமாயணம்)

இராமன் வனவாசமுடிந்து மீண்டுவந்து திருமுடி சூடிய பொழுது பூமிதேவி மகிழ்ந்துகொண்டபடி யிது. பீழை = துன்பம். தன் நாயகன் வரக் கொங்கைஆர நன்கு தழுவி நோய் நீங்கினள் என இஃதுணர்த்தி நிற்றல் காண்க.

காதலன் வரவில் ஆவல்கூர்ந்து காதலி கதித்திருப்பள் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சத்தியரதைபால் உணரப்படும்.

கதை.

சத்தியரதை என்பவள் கேகயன் என்னும் அரசனுடைய அருமைத் திருமகள். கண்கொள்ளாக் கட்டழகினள். இவளது உருவ நலன் மறுபுல மெங்கணும் வியந்து பேச நின்றது. பருவ மெய்திக் கன்னி மாடத்தில் மன்னியிருக்குங்கால் மன்னர் பலரும் மையல்மீக்கொண்டு இவளை எய்த முயன்று ஏங்கியலைந்தார். இவள் எவரையும் கருதாமல் அறிவுநூலகளை ஆய்ந்து பெருமித நிலையில் மருவியிருந்தாள். ஒருநாள் நகர் மருங்கிருந்த குளிர்பூஞ்சோலையில் தனியே இவள் உலாவி வருங்கால் அங்குத் தெய்வ கதியாய் வந்த சத்தியவதனன் என்னும் அரசிளங்குமரனைக் கண்டாள். அவன் சூரியகுலத் தோன்றல். திரையாருணன் என்னும் அரசனுடைய அருமைத் திருமகன். பேரழகும் பேராண்மையு முடையவன். அவனைக் கண்டவுடனே இவள் காதல் மீக்கொண்டாள். அவனும் உளமிகவுருகி அளவிலாவலோடு அலமந்து நின்றான். நயந்து நோக்கி நகைமுகங் கோட்டி விரைந்து கண்புதைத்து இவள் நாணி நின்றமையால் அவன் வேணவாவுடன் சில விளம்பலானன்.

"கிள்ளை ஏந்திக் கிளைநரம்பி னடந்து சிவந்த காந்த ளங்கைத
தெள்ளாரமுதே! மலர்ந்திருவே! தேனே! கனிந்த செழுங்கனியே!
கள்ளக்கருங்கட் குடங்கையால் தமியேன் உயிரைக் களனு மாபோல்
அள்ளி அள்ளி அருந்து தீங்கு ஆகாது உனபே ரறிவினுக்கே. (க)
உருவமருங்கு லுள் வாங்கத் தேய்ந்துக் கரிகள் எட்டினெடுமெ
செருவேற்றெழுந்த திரண்முலையை மறையாது, அணங்கெனநையமுறு
மருள்போயொளிப்ப இமைத்து அனங்கன் வாளியாலுள் வருந்தாமல்
அருளொக்களித்தமதா நெடுங்கண் புதைத்தல்என்மேல்அன்பேயோ?(உ)
விழைந்தோர் கொம்மை முலையல்லால் வேற்றோர் மருந்தி னமையாத
கழிந்தகாமப் பிணியகலக் கனிவாய்த்த தம்பல் மருந்தருந்திப்
பிழிந்ததேறலனையமொழிப் பேதைதடந்தோள் நலனுகாவான்
எழுந்தவுள்ளம் இவ்விடமே சேர்தற்கியைந்த இடம் என்றான்." (ந)

இங்ஙனம் விழைந்து மொழிந்து கந்தருவ நிலையில் கலந்து பினபு உலகறிய மணந்து உயர்போகங்களை நுகர்ந்தான். ஆரா இன்ப நிலையமாய் அவனுக்கு இவள் அமர்ந்திருந்தாள். அரும்பெற லமிர்தென வியந்து மருங்ககலாமல் மருவி வருங்கால் வசிட்ட முனிவர் செய்த பெரு வேள்விக்கு ஒரு முறை அரசன் போக நேர்ந்தது. அரசை அமைச்சர் பேணிவந்தார். இவள் கணவனையே

நினைந்து கலுழ்ந் திருந்தாள். அணிதுறந்து பணிமறந்து உடல் மெலிந்து படருழந்து பரிந்து கிடந்தாள். சுகன்னி, சுகாந்தை முதலிய தோழியர் பலரும் நாளும் ஆற்றிவந்தார். வேள்வி முடிந்து மன்னன் மீண்டு வந்தான்; அவன் வரவினை உறவினர் சிலர் முந்துற வந்து இவ் அரசிக்கு உரைத்தார். வள்ளல் வரின் அள்ளி நுகர்வல் என உள்ளந் துடி ளி இவள் உருகியிருந்தாள். அத்திரு மகன் வந்தான்; இவள் மருவி மகிழ்ந்தாள். "வருக கொண்கன், பைதல் நோய் கெடப் பருகுவன்" என்பதை உலகம் இவள்பால் உணர்ந்துநின்றது. ஆண்டு மூன்று கழிந்தபின் இவள வயிற்றில் ஓர் அருமைத் திருமகன் பிறந்தான். அவனே சத்திய சீலனாகிய அரிச்சந்திரன் என்க. அரும்பெற லழகும் பெரும்பொறைக் கற்பும் அருமகப்பேறும் ஒருங்கமையப் பெற்ற இவளை மருங்கமையப் பெற்று அம்மன்னன் மாநிலம் புரந்ததை மேனிலமும் புகழ்ந்தது.

"ஆடகமுளரிப் பொகுட்டில் வீற்றிருக்கும் ஆரமென் முலைத்திரு மடநதை
பாடுறுமநதாரகலம் வீற்றிருப்பப் பார் பொதுவறத்தனி புரக்கும
ஓடைமால் யானைச் சந்தியவதனன் உயிர்நிகர் எழிலுடை மைந்தன்
ஏடவிழ் நறுநதாா மனனவா போற்றும் அடல் அரிச்சந்திரன் எனபான்"
(கூர்மபுராணம்)

இவளுடைய கணவன் பெருமையும், புதல்வன் அருமையும், இதன்கண்ணும் குறிக்கப்பட்டுள்ளனகாண்க. அம்மன்னனுக்குத் திரிசங்கு என்று பிரசித்தமா வழங்கும் பெயர் காரணத்தால் வந்தது. மூன்று சங்குகளின் வடுக்கள் அவன் தலையில் அழுத்தப்பட்டுள்ளமையால் அப்பெயர் வழுத்தப்பட்டது என்க.

வள்ளலுறின் தெள்ளமிர்தை வாரியுண்டல் போல்விழைந்
தள்ளி நுகர்வ னமர்ந்து.

தலைவி பருக விழைந்திருந்தமை இதனால் கூறப்பட்டது.

1267. மன்னன் வருமுன் மருதி பலநினைந்தாள்
கொன்னேயீ தென்னே குமரேசா—முன்னம்
புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின். (எ)

இ—ள்.

குமரேசா! தன் காதலன் வருமுன் மருதி ஏன் பலநினைந்து

உளைந்தாள்? எனின், கண் அன்ன கேளிர் வரின் புலப்பேன்கொல்? புல்லுவேன்கொல்லோ? கலப்பேன்கொல்? என்க.

கண் அன்ன கேளிர் என்றது கணவனை. கண்போல் உரிமையுள்ளவன் எனத் தனக்கு அவன்பாலுள்ள அருமை தோன்றக் குறித்தாள். "கண்போன்ற மாமன் மகள்" (சிந்தாமணி); "கண்ணுண் மணிபோல் மகவு'' (இராமாயணம்); "கண்போற் காதலர்'' (பெருங்கதை). இவற்றுள் கண் உவமை வந்துள்ளமை காண்க.

கேள் = அன்பு; உரிமை. கேளுடையவர் கேளிர் என்க.

புலத்தல் = ஊடல். புல்லுதல் = கூடல். கலத்தல் = புலத்தலும், புல்லலும் ஆகிய இரண்டும் கலந்து நிற்றல். அஃதாவது புலந்து நீடாமலும், விரைந்து வீழாமலும் முந்துற அவர் விழைந்தணைந்தபின் இணங்கியமர்தல். இனி, கலப்பேனோ என்றதற்குப் புலவியும் புல்லலுமின்றிப் பிரிதற்கு முன்னிருந்ததுபோல் பழைய நிலையில் கலந்து வாழ்வேனோ எனினுமாம்? ஒன்றிலும் துணிவு தோன்றாமல் நின்றாளாதலால் ஐயமாயுரைத்தாள். கொல் என்னும் இடைச்சொல் மூன்றிடத்தும் ஐயப்பொருளை புணர்த்திநின்றது.

கண் போன்ற என் காதலர் வரின் ஊடல் கூடல் உவத்தல் என்னும் இவற்றுள் யாதினைச் செய்வேன் என்பதாம்.

பிரிந்து போன நாயகன் விரைந்து வந்தருளுவன் என அறிந்தவுடனே நாயகி விழைந்து நினைந்தபடி இது.

பருவங்கண்டு வாராமையால் பிணங்குவோம் என்று நினைந்தாள்; உடனே ஆர்வமீதூர்ந்து அணைந்துகொள்வோம் என்று துணிந்தாள்; பின்பு அவர் முகம் புகுந்து முந்துற முயங்கின் அதன் பின் இணங்கிவிடுவோம் என எண்ணினாள் என்க.

இங்ஙனம் பலவாறு நினைந்தமையால் இவளது மனநிலையும் மய்யலியல்பும் அறியலாகும்.

"நலத்தகை எழிலுண்கண் நல்லார்தம் கோதையால்
அலைததபுண் வடுக்காட்டி அன்பின்றி வரின்எல்லா
புலப்பேன்யான் எனபேன்மன் அநநிலையே அவறகாணின
கலப்பேன் என்னும்இக் கையறு நெஞ்சே;

கோடெழில் அகலல்குற் கொடியன்னார் முலைமூழ்கிப்
பாடழி சாந்தினன் பண்பின்றி வரின எல்லா
ஊடுவேன் என்பேன்மன் அந்நிலையே அவற்காணின்
கூடுவேன் என்னுமிக் கொள்கையி னெஞ்சே;
இனிப்புணர்ந்த எழில்நல்லார் இலங்கெயிறு உறாஅலின்
நனிச்சிவந்த வடுக்காட்டி நாணின்றி வரின் எல்லா
துனிப்பேன்யான் என்பேன்மன் அந்நிலையே அவற்காணின்
தனிதகே தாழும்இத் தனியில் நெஞ்சே;

என வாங்கு

பிறைபுரை ஏர்நுதால்! தாமெண்ணியவை யெல்லாம்
துறைபோதல் ஒல்லுமோ தூவாகா தாங்கே
அறைபோகு நெஞ்சுடை யார்க்கு." (மருதக்கலி 2)

தான் புலக்கக் கருதியும் தன் நெஞ்சம் கலத்தலை விழைந்து காதலன்பால் ஓடி நின்றதெனத்தனது ஒல்லாமையையும் உள்ள நிலையையும் ஒருத்தி இதில் உரைத்திருந்தலறிக.

தலைவன் வருமுன்னரே கலவிநிலைகளை விழைந்து விரைந்து நின்றமையால் இது விதுப்பாயிற்று. இதுவரை தலைவி விதும்பல் நடந்தது. இனி அடுத்து வருவது தலைவன் விதும்பல் என்க.

பிரிந்த காதலன் வரின் கலந்துகொள்வதைக் குறித்துத் தலைவி பலபல நினைந்து நிற்பள் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை மருதிபால் உணரப்படும்.

கதை.

மருதி என்பவள் நருமன் என்னும் குறுநில மன்னனுடைய அருமைத் திருமகள். அழகும் பொறையும் அறிவும் தகவும் உளமலி நிறையும் வளமுறப் பெற்றவள். இவளுடைய இயல்நலங்களை வினவியறிந்து எழினி என்பவன் மயல் மிகுந்தான். அவன் அதிகமான்அஞ்சி என்னும் அரசனுடைய அருமைப் புதல்வன். நல்ல அழகன். நோக்கிய மங்கையர் உள்ளங்களைப் போக்கறப் பிணிக்கும் நோக்குடையான் என ஒளவையாரும் ஒருமுறை அவனைநோக்கி யுரைத்துள்ளார். அடியில் வருவது காண்க.

"பூப்போல் உண்கண் பசந்துதோள் நுணுகி
நோக்கிய மகளிர்ப் பிணித்தன்று." (புறநானூறு 96)

ஏன இங்ஙனம் கண்கவர் வனப்போடு கனிந்திருந்த அவன் விழைந்துவந்து இவளை மணந்துகொண்டான். அன்றிலும் பேடையும்போல் ஒன்றிய அன்புடன் என்று மருவி இவர் இன்புற்றிருந்தார். "நாகர்தம் பதியிலுள்ள நலத்தவர் போல நாளும், போகமார்ந் திருந்தார்" என இவரது நகர்ச்சிநிலை எங்கும் புகழ்ச்சியுற்று நின்றது. தன்னைப்போலவே மன்னுயிர்களும் இன்புற்று வாழும்படி அவன் அன்புசெய்துவந்தான். தன் நாட்டிலுள்ளவர்கள் யாதொரு வாட்டமும் உறாவகை ஆட்சி செலுத்தி வந்தமையால் அவனது மாட்சியை அறிஞர் பலரும் போற்றி நின்றார். ஒன்று அடியில் வருவது காணக.

"எருதே இளைய நுகம் உணராவே;
சகடம் பண்டம் பெரிதுபெய் தன்றே;
அவலிழியினும், மிசை ஏறினும்,
அவணது அறியுநர் யார்? என உமணர்
கீழ்மரத் தியாத்த சேம அச்சன்ன
இசை விளங்கு கவிகை நெடியோய்! திங்கள்
நாள்நிறை மதியத் தனையை, இருள்
யாவணதோ நின் நிழல்வாழ் வோர்க்கே?" (புறம் 102)

இது, அவனது அரசுநிலையை வியந்து ஔவை யுரைத்தது. அவல் = பள்ளம். மிசை = மேடு. பெரிய பண்டங்களை ஏற்றிச் செல்லும் வண்டி இடையே ஏதேனும் இடையூறுறின் அத்தடை நீக்கும் சேம அச்சுப்போல இடர் நீக்கி ஏமஞ்செய்து கலைநிறை மதிபோல் நிலவிநிற்றலால் அவன் குடைநிழலில் வாழ்வோர் துயரமாகிய இருளினை அறியார் என இதில் இசைத்திருத்தலறிக. இதனால் அவனது அறிவும் திறனும் அருளும் புகழும் அறியலாகும். இங்ஙனம் அளிசெய்து ஒளியோடு வாழ்ந்துவருங்கால் பகைவர் சிலர் மிகைசெய்து நின்றார். அவர்மேல் அமர்குறித் தெழுந்து அவன் அகன்று போனான். அப்போக்கில் இவள் புலம்பியிருந்தாள். போன அவன் தானைகளுடன் மூண்டு சமர்புரிந்தான். திங்கள் ஆறு சென்றும் தெவ்வரை வெல்லாது தியங்கி நின்றான். முடிவில் நெடிது முயன்று கடும்போராற்றி அரிதின் வென்று அவரது அரணங்களையழித்து வரகும் கொள்ளும் விரவிவிதைத்து வன்சினந் தணிந்து வாகைசூடி ஓகையுடன் மீண்டான். அவ்வெற்றித் திறத்தைக்கண்டு அனைவரும் அவனை வியந்து வாழ்த்தினர்.

"மதியேர் வெண்குடை அதியர் கோமான்
கொடும்பூண் எழினி— கொடாஅ
உருகெழு மன்னர் ஆரெயில் கடந்து
நிணம்படு குருதிப் பெரும்பாட் டீரத்து
அணங்குடை மரபின் இருங்களந் தோறும்
வெள்வாய்க் கழுதை புல்லினம் பூட்டி
வெள்ளை வரகும் கொள்ளும் வித்தும்
வைகலுழவ! வாழிய பெரிது." (புறம் 392)

அன்று அவன் வென்று செய்த திறங்கள் இதன்கண்ணும் குறிக்கப்பட்டுள்ளன காண்க. இங்ஙனம் வெற்றிச் சிறப்புடன் அக் கொற்றவன் மீண்டு வருவதை ஒற்றர் சிலர் ஓடிவந்து உற்றவரிடம் உரைத்தார். நகர மாந்தர் எதிர்கொண்டழைக்க இரைந்தெழுந்தார். உவளகத்திருந்த இவளறிந்து உள்ளந் துள்ளி உவந்தெழுந்தாள். அச் சுந்தரன் வந்தவுடன் புலப்பதா? புல்லுவதா? அல்லது பொதுவாக நிற்பதா? என்று விதுப்புற் றுளைந்தாள். "கண் அன்ன கேளிர் வரின், புலப்பேன் கொல்? புல்லுவேன் கொல்லோ? கலப்பேன் கொல்?" என்பதை உலகம் காண இவள் உணர்த்திநின்றாள்.

ஊடலைமுன் காட்டி உயிரனையான் வாடுமுனம்
கூடி மகிழ்வன் குழைந்து.

காதலி நாடி யிருந்தமை இதனால் கூறப்பட்டது.

1268. வேந்தன் வினைமுடிவை வேண்டி விறல்நீலன்
கூர்ந்துநின்றான் என்னே குமரேசா—சேர்ந்த
வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை யயர்கம் விருந்து. (அ)

இ—ள்.

குமரேசா! அரசனது வினைமுடிவை நினைந்து நீலன் ஏன் தனது மனைவியை விழைந்து நின்றான்? எனின், வேந்தன் வினைகலந்து வென்றீக மனைகலந்து மாலை விருந்து அயர்கம் என்க.

சென்ற ஏழு கவிகளால் தலைவி தலைவனை விழைந்து நின்ற நிலைகளை யுணர்த்தினர்; இனி இதுமுதல் வருகின்ற மூன்று கவிகளால் தலைவன்விழைந்து விரைந்துள்ளமையை யுணர்த்துகின்றார்.

வினை என்றது போரினை. அது, வென்று என்றதனால் விளங்கி நின்றது. வென்றீக = வெற்றியெய்துக. வியங்கோள் வாழ்த்துதற் பொருளில் வந்தது.

மனை என்பது மனைவியை. இல்லின் பெயர் இல்லாளுக்கு ஆனமையால் இது, ஆகுபெயர் என்க.

"பிறிதின் பெயரால் பிறிது பொருள்சொலின்
அறிவோர் அதனை ஆகுபெயர் என்ப." (அவிநயம்)

விருந்து அயர்கம் = போக நலன்களை நுகர்ந்து மகிழ்வேம. அயர்தல் = களித்தல்; உவந்து கொண்டாடல். "துயரறு கிளவி யோடு அயர்ந்தீகம் விருந்தே" (பாலைக்கலி 32); "கழிபெருஞ் செல்வக் கள்ளாட்டு அயர்ந்து" (மணிமேகலை 6,102); "மகளிர் ஒண் தழை அயரும் துறைவன்" (ஐங்குறுநூறு 147); "வைவான் மருப்பிற் களிருமணன் அயர்பு" (பரிபாடல் 2). இவற்றுள் அயர் தல் உணர்த்தி நிற்றலறிக.

மாலை = அந்திப்பொழுது. அக் காலத்தைக் குறித்தது அது காம நிலையதாயிருத்தலின் என்க. அடியில் வருவது காண்க.

"பகலிடம் விளக்கிய பருதியஞ் செல்வன்
அகலிடம் வறிவிதாக அகத்தது
உயர்வரை யுப்பால் கதிர்கரந்து ஒளிப்ப,
வினைக்கும் பொருட்கும் நினைந்து நீத்துறையுநர்
எல்லை கருதியது இதுவென மெல்லியற்
பணைத்தோள் மகளிர்க்குப் பயிாவன போல
மனைப்பூங் காவின் மருங்கிற் கவினிய
பைந்தார்முல்லை வெண்போது நெகிழ,
வெறுக்கைச் செல்வம் வீசுதல் ஆற்றாது
மறுத்துக் கண்கவிழ்ந்த மன்னர்போல
வாசம் அடங்கிய வாவிப் பன்மலர்
மாசில் ஒள்ளொளி மணிக்கண் புதைப்பப்,
பெருமை பீடற நாடித் தெருமந்து
ஒக்க லுறுதுயர் ஓம்புதல் உள்ளிப்
பக்கந் தீர்ந்த பரிசிலர் உதவாச்
செறுமுகச் செல்வரிற் சேராதுபோகி
யுறுபொருள் உள்ளது உவப்ப வீசி
வெறுவதுவிடா விழுத்தகு நெஞ்சத்து
உரத்தகையாளர் சுரத்துமுற் சீறூர்
எல்லுறுபொழுதிற் செல்லல் ஓம்பி

மகிழ்பதம் அயின்றிசி ஞங்கு மல்லிகை
அவிழ்தாது ஊதி அளிதுயில் அமரப்,
புண்கண்மாலை போழ்த தன்கண்
தீராக்கற்பின் தேவியை மறந்து
போராக் கழற்கால் பெருந்தகை புலம்பி" (பெருங்கதை)

மாலைப் பொழுதில் தனது காதலியை நினைந்து உதயணன் இதில் உளைந்திருத்தலறிக. சூரியன் மறைய, முல்லை மலர, தாமரை குவிய, மல்லிகைத்தாதில் வண்டு துயில்கொளவந்த மாலை என்க. உலோபிகளையும், வள்ளல்களையும் குறித்து இதில் உரைத்துள்ள நிலைகளை யூன்றி யுணர்ந்துகொள்க. காதல்நலங் கனியச் செய்தலால் மாலைக் காலம் இங்ஙனம் ஆதரவுகொள நேர்ந்தது.

அரசன் போர்முனையில் பொருந்தி வெல்வானாக; யாம் மனைவியைச் சென்று கூடி மாலையில் மகிழ்ந்துகொள்வோமாக என்பதாம்.

அரச காரியமாய்ப் போர்மேல் சென்ற தலைவன் முடிவில் ஒருநாள் பாசறையிலிருந்து தனது தலைவியை நினைந்து விழைந்து நின்றபடியிது.

அரசனது வினைமுடிந்தாலொழியத் தான் மனைபுகுந்து மகிழ முடியாது ஆதலால் "வேந்தன் வினை வென்றீக" என வேண்டி நின்றான். வினைமுடியுமுன்னரே மனைவியை நினைந்து இங்ஙனம் விரைந்து நின்றமையான் இது அவள் வயின் விதும்பல் ஆயிற்று.

போரில் மூண்டிருக்குங்கால் மனைவியின் நினைவு முனைந்து தோன்றாது; அது முடிவாகி வெற்றிகைகூடும் என்று தெரிந்த பொழுதுதான் வீட்டு நினைவு மிகுந்தெழும் ஆதலால் வென்றி நிலையை விழைந்து கூறினான்.

"கிழவி நிலையே வினையிடத்து உரையார்;
வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்."
(தொல்-கற்பியல் 45)

என்பதும் ஈண்டெண்ணத்தக்கது. உரையார் என்றதனால் தலைவியை வினையின்கண்ணும் நினைந்து நிற்பர் என்பதாயிற்று. பாசறையிலமர்ந்து வினைமுடிவையும் விருந்தயர்தலையும் ஒருங்கு நினைந்து தலைவன் இங்ஙனம் உளங்களித்து நின்றான் என்க.

"பெருஞ்சின வேந்தன் அருந்தொழில் தணியின்
விருந்து கனிபெறுதலும் உரியள் மாதோ
இருண்டு தோன்று விசும்பின் உயர்நிலை யுலகத்து
அருந்ததி யனைய கற்பிற்
குரும்பை மணிப்பூட் புதல்வன்தாயே." (ஐங்குறுநூறு 442)

"உலகுட னிழற்றிய தொலையா வெண்குடைக்
கடல்போற் றானைக் கலிமா வழுதி
வென்றமரு ழந்த வியனபெரும் பாசறைச்
சென்று வினை முடித்தன மாயின், இன்றே
காரப்பெயற்கு எதிரிய காண்டகு புறவிற்
கணங்கொள் வண்டின் அஞ்சிறைத் தொழுதி
மணங்கமழ் முல்லை மாலை யார்ப்ப
உருக்காண் வந்தனறு பொழுதே வல்விரைந்து
செல்க பாகநின் னல்வினை நெடுந்தேர்
வெண்ணெல் அரிநர் மடிவாய்த் தண்ணுமை
பன்மலர்ப் பொய்கைப் படுபுள் ளோப்பும்
காய்நெற் படப்பை வாணன் சிறுகுடித்
தண்டலை கமழும் கூந்தல்
ஒண்டொடி மடந்தை தோளிணை பெறவே." (அகம் 204)

வேந்தன் வினை வென்றவுடன் மனைகலந்து மாலை விருந்தயர்வேம் எனத் தலைவன் நினைந்துள்ளமையை இவற்றுள்ளும் உணர்ந்து கொள்க.

"வந்து வினை முடித்தனன் வேந்தனும்; பகைவரும்
தம் திறை கொடுத்துத் தமர் ஆயினரே;
முரண் செறிந்த இருந்த தானை இரண்டும்
ஒன்றென ஓர்ந்தன; படையேய் நின்தேர்
முன்னியங் கூர்தி பின்னிலை யீயாது
ஊர்க பாக! ஒருவினை கழிய
தண் குடவாயி லன்னோள்
பண்புடை ஆகத்து இன்துயில் பெறவே" (அகம் 44)

வினைமுடிந்தவுடன் மனைவியை விழைந்து தனது தேரை விரைவில் செலுத்தும்படி பாகனை ஒரு தலைவன் இதில் ஏவியிருத்தல் காண்க.

வினைமேல் சென்ற தலைவன் மனைவியை நினைந்து விழைந்து நிற்பன் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை நீலன்பால் உணரப்படும்.

கதை.

நீலன் என்பவன் வஞ்சி நகரில் இருந்தவன். செங்குட்டுவன் என்னும் சேரமன்னனுக்குச் சேனாதிபதியாய் இவன் சிறந்து நின்

றான். அஞ்சா நெஞ்சினன். மருவலர் நிலைகளை ஒற்றியறிவதிலும் வல்லவனாதலால் ஒற்றன் ஆகவும் இவன் உயர்ந்து விளங்கினான். அரசன்பால் பேரன்புடையவன். அம்மன்னன் ஒரு முறை வச்சிரம், மகதம் முதலிய நாடுகளின் மீது போர்வேட்டெழுந்தான். இவனும் தனது அருமை மனைவியாகிய தருமதை என்பவளைத் தேற்றியிருத்திவிட்டுச் சேனைகளோடு திரண்டுசென்றான். போன இடங்களில் போர்மிக மூண்டு நின்றமையால் ஈராண்டுகள் கழிந்தும் யாரும் மீண்டு வரவில்லை. அக்கட்டழகி கடுந்துயருழந்து கலங்கியிருந்தாள். முடிவில் பகையடங்கவென்று அம்மன்னன் உயர்புகழ் கொண்டான். வெற்றிக் களிப்போடு பாசறையில் படைகள் சூழ அவன் வீற்றிருக்குங்கால் இவன் வீட்டை நினைந்து வேட்கைமீக் கூர்ந்தான். அன்றிரவு முழுதும் கண் துயிலின்றிக் கருதிக் கிடந்தான். இல்லினை அடைந்தவுடன் தான் எய்தி நுகரும் இன்ப நலங்களையெல்லாம் நினைந்து நினைந்து நெஞ்சமுருகினான். "வெங்கனல் மீமிசை வைத்த வெண்ணெயின், நெஞ்சக முருக நிறுத்தலாற்றாய்" அருத்தியுற்றிருந்தான். மறுநாள் விடிந்தது; அரசன் அணிசெய்தெழுந்தான். படைகள் நடந்தன; அணிநகரடைந்தன. இவன் மனை புகுந்தான்; அளவிலின்பங்களை நுகர்ந்து உளமிக மகிழ்ந்தான். இவனைப் போலவே மற்ற வீரர்களும் தத்தம் காதலிகள்பால் ஒத்த அன்புடன் துய்த்து மகிழ்ந்தார். அடியில் பார்க்க.

"தண்மதி யன்ன தமனிய நெடுங்குடை
மண்ணக நிழற்செய மறவாள் ஏந்திய
நிலந்தரு திருவின் நெடியோன் தனாது
வலம்படு சிறப்பின் வஞ்சி மூதூர்
ஒண்டொடித் தடக்கையின் ஒண்மலர்ப் பலிதூஉய்
வெண்டிரி விளக்கம் ஏந்திய மகளிர்
உலக மன்னவன் வாழ்கென்று ஏத்திப்
பலர்தொழ வந்த மலரவிழ் மாலை
போதவிழ் கண்ணிப் பொலம்பூந் தெரியல்
வேந்துவினைமுடித்த வேந்துவாள் வலத்தர்
யானை வெண்கோட் டழுத்திய மார்பும்,
நீள்வேல் கிழித்த நெடும்புண் ஆகமும்,
எய்கணை கிழித்த பகட்டெழில் அகலமும்,
வைவாள் கிழித்த மணிப்பூண் மார்பமும்,
மைம்மலர் உண்கண் மடந்தையர் அடங்காக்
கொம்மை வரிமுலை வெம்மை வேதுறீஇ,

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

• அகிலுண விரித்த அம்மென் கூந்தல்
முகில் நுழை மதியதது முரிகருஞ் சிலைக்கீழ்
மகரக் கொடியோன் மலர்க்கணை துரந்து
சிதரரி பரந்த செழுங்கடைத் தூது
மருந்தும் ஆயதிம் மாலைஎன்று ஏத்த
இருங்கனித் துவாவாய் இளநிலா விரிப்பச்
சுருங்கயல் பிறழும் காமர் செவ்வியின்
திருநெயிறு அரும்பிய விருந்தின் மூரலும்
மாநதளிர் மேனி மடவோர் தம்மால்
ஏந்து பூண் மார்பின் இளையோர்க்கு அளிததுக்
காசறைத் திலகக் கருஞ்சுறை கிடந்த
மாசில் வாண்முகத்து வண்டொடு சுருண்ட
குழலும் கோதையும கோலமும் காண்மார்
நிழல் கால் மண்டிலம் தம்மெதிர் நிறுத்தி
வணர்கோட்டுச் சீறியாழ் வாங்குபு தழீஇப்
புணாபுரி நரம்பிற் பொருள்படு பததர்க்
குரல் குரலாக வருமுறைப் பாலையின்
துத்தம் குரலாத தொன்முறை யியற்கையின்
அந்தீங் குறிஞ்சி அகவல் மகளிரின்
மைந்தர்க்கு ஓங்கிய வருவிருந்து அயர்ந்து" (சிலப்பதிகாரம்)

பிரிந்துசென்ற வீரர் வேந்துவினை முடிந்தவுடன் மனைகலந்து மாலையில் விருந்து அயர்ந்துள்ள நிலைகளை இதில் ஊன்றிபுணர்ந்து கொள்க. மாலைக்காலமானது போரில் புண்பட்ட வீரர்களுடைய மார்பங்களை மடந்தையர் கொம்மை முலையால் வெம்மைதீர வேது கொண்டு ஒத்தி, விருந்தயர்ந்ததென்று கூட்டிக் காண்க. அடிகளது சொல்லும் பொருளும் இதில் அமைந்து வந்துள்ளமையறிக. இங்ஙனம் களித்த வீரரெவரினும் தலைவனை நீலன் சாலவும் தினைத் தான். போர்மேற்போன தலைவன் "வேந்தன் வினைகலந்து வெல்க; யாம் மனைகலந்து மாலை விருந்தயர்வம்" என வினைமுடிவில் நினைந்து விரைந்து நிற்பன் என்பதை உலகம் காண இவன் உணர்த்தி நின்றான்.

இல்லிவுள இன்னமிழ்தை யின்றேபோ யெய்தியென்றன்
அல்லலெலாம் தீர்வ னற.

வினைமேல் போனவன் விரைந்துநின்றமை இதனால் கூறப்பட்டது.

1269. ஏனோநா ளெண்ணி யினைவ ளெனமனையைக்
கோனனுமுன் தேர்ந்தான் குமரேசா—ஆன
ஒருநாள் எழுநாள்போல் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு. (கூ)

இ—ள்.

குமரேசா! பிரிவின்கண் நாள் நெடிது நீளும் என்று மனைவியை நினைந்து அனு ஏன் மறுகி நின்றான்? எனின், சேண் சென்றார் வருநாள் வைத்து ஏங்குபவர்க்கு ஒருநாள் எழுநாள் போல் செல்லும் என்க.

இது, தலைவி நிலையை எண்ணித் தலைவன் தவிக்கின்றது.

சேண் சென்றார் = நெடுந்தூரம் போயுள்ளவர். தலைவன் வினைமேல் பிரிந்து போயிருக்கும் இடம் வெகு தூரமாயிருந்தமையால் சேட் சென்றார் என்றான். "மீட்கும் வேட்கையொடு சேட் புலம் போகி". (பெருங்கதை 3, 2); "சேண் விளங்கும் புகழ்" (புறம் 10) இவற்றுள் சேண் குறித்து நிற்றலறிக.

வைத்து = மனத்தில் குறித்துவைத்து. பிரிந்து செல்லும் தலைவன் இன்னநாளில் திரும்பிவருவல் என உறுதிகூறி அகல்வன்; அகலவே தலைவி நெஞ்சில் அந்நாள் அழுத்தமாகப் பதிந்திருக்கும் ஆதலால் "வருநாள் வைத்து" என்றார்.

ஏங்கல் = வருந்தல். எண்ணிய பொருளை எய்த விழைந்து எதிர்நோக்கி வெய்துயிர்த்து நிற்கும் இன்னல் நிலை ஏங்குதல் என்க. "ஏங்கிய நினைவுடன் இனைந்தழுதுகுத்த, கண்ணீர்கொண்டு மண்ணினை நோக்கி" (பெருங்கதை 4, 14), நோயுடை நெஞ்சத்து எறியா இனைபு ஏங்கி, யாவிரும் எங்கேள்வற் காணீரோ என்பவள்" (நெய்தற்கலி 29), "ஏங்கிய பொருமலன் இழிகணீரினன்" (இராமாயணம், மீட்சி 79); இவற்றுள் ஏங்கல் உணர்த்திநிற்றல் காண்க.

எழுநாள் என்றது பலகாலமாம் என்றபடி. "எழுபது கோடியுறும்" (குறள் 639) "எழுபிறப்பு" (குறள் 62) "எழுமை எழு பிறப்பு" (குறள் 107) "எழுமை" (குறள் 126) "எழுமையும்"

(குறள் 398) "எழுமையுந்தான்" (குறள் 835) "எழுநாளேம்" (குறள் 1278). ஏழ் என்னும் எண்ணம் இவற்றுள் எண்ணப்பட்டிருத்தலை ஈண்டு எண்ணிக்கொள்க.

பிரிந்து நெடுந்தூரம் போயுள்ளவர் வருகின்ற நாளை எதிர் நோக்கி ஏங்குந் தலைவியர்க்கு ஒருநாள் எழுநாள்போல் நீளும் என்பதாம்.

வினைமேல் பிரிந்துபோன தலைவன் தொழில் முடிவில் மனைவியை நினைந்து மறுகிய படியிது.

தான் திரும்பி வருநாளை நினைந்துகொண்டு கணம் ஓர் ஊழியாக் கழித்துக் கிடப்பள் ஆதலால் விரைந்து போகவேண்டும் என்று விழைந்தெழுந்தவன் "வருநாள் வைத்து ஏங்குபவர்க்கு ஒருநாள் எழுநாள்போல் தோன்றும்" எனப் பிரிவிலுள்ள மகளிர் நிலையைப் பொதுவாக இங்ஙனம் எண்ணி நின்றான் என்க. என்றும் ஒருபடியாயமைந்துள்ள நாள் பிரிந்தார்க்கு நெடிதாய்த் தோன்றுதற்குக் காரணம்? அக்காலம் நெருப்பிலுற்றதுபோல் விரகதாபத்தால் நொந்து விருப்புமீதூர்ந்து துடித்திருத்தலால் என்க.

"நீயும் பாங் கல்லை காண் நெஞ்சமே! நீளிரவும்
ஓயும் பொழுதின்றி ஊழியாய் நீண்டதால்
காயும் கடுஞ்சிலை என் காகுத்தன் வாரானால்
மாயும் வகையறியேன் வல்வினையேன் பெண்பிறந்தே. (க)
தெய்வங்காள்! என்செய்கேன? ஓரிரவு ஏழூழியாய்
மெய்வந்து நின்று எனதாவி மெலிவிக்கும்
கைவந்த சக்கரத்து என் கண்ணனும் வாரானால்
தைவந்த தண்தென்றல் வெஞ்சுடரில் தானடுமே." (திருவாய்மொழி)

ஓர் இரவு ஏழ் ஊழியாய் நின்று ஆவி மெலிவிக்கும் என நாயகி நிலையிலமர்ந்து நம்மாழ்வார் இதில் வாய்விட்டிருத்த லறிக.

"பலபல ஊழிகளாயிடும் அன்றியோர் நாழிகையைப்
பலபல கூறிட்ட கூறாயிடும் கண்ணன விண்ணனையாய்!
பலபல நாளன்பர் கூடிலும் நீங்கிலும் யாமெலிதும்
பலபல சூழலுடைத்து அம்ம வாழியிப் பாயிருளே" (திருவிருத்தம் 16)

"மணக்கும் பல்பகல் ஓர் நொடி; வனமுலை மருமம்
தணக்கும் ஓர் கணம் ஊழி நாளாம்." (கூர்ம புராணம்)

பிரிந்தார்க்கு நாழிகை ஓர் ஊழியாகவும், செறிந்தார்க்கு ஊழி ஓர் கணமாகவும் தோன்றும் என இவற்றுள் குறித்துள்ளமை

யறிக. இவ்வாறு பிரிவில் மறுகுவளே என்று மனைவியை எண்ணி யிரங்கியதனால் தலைவனது உள்ளக்காதல் உணரலாகும்.

"அன்னமென் னடையும் நோக்கும் சாயலும் அணியும் ஏரும்
மின்னினுண் ணுசுப்பும் வெய்யமுலைகளு முகமும் தோன்ற
என்மனத் தெழுதப்பட்டாயாயினும் அரிவை கேளாய்!
உன்னை யான் பிரிந்த நாள் ஓர் ஊழியே போன்ற தென்றான்."
(சிந்தாமணி 2100)

இது, சீவகன் தன் காதலியாகிய குணமாலையை நோக்கி யுரைத்தது. அகன்று நின்றபொழுது ஒருநாள் பெரு ஊழியாய் வளர்ந்து நின்றதென ஆண்மையாளனான அவன் புகன்றுள்ளதனால் பெண்மகளுக்கு அது என்னும் என்பது எளிது புலனும்.

சேணிடைப் பிரிந்து நின்றாலும் இல்லிலுள்ளவளை எண்ணி நல்ல வீரரும் ஏங்கியுளைவர் என்பது இதனால் அறியலாகும்.

"பாங்காளை, வேளை மருட்டு கண்ணாளைப், பகற்பொழுது
தூங்காளைக், காமசுரதஞ் செய்வாளை, என் சொல்லுக்குப் பின்
வாங்காளை, மோகம் வளரவைப்பாளை, என் மார்பைவிட்டு
நீங்காளை, எப்படியோ பிரிந்தாறும் என நெஞ்சகமே?"

எனத் தனது துணைவியை நினைந்து பிரிவில் ஒருவன் இதில் உருகி யிருத்தலறிக. இவ்வாறு உருகி நின்றதெல்லாம் அவன் விரைவில் வருதற்கு ஏதுவாம் என்க.

"வருநாள் கழிவதொன் றில்லையென்றேவற் புறுத்தியதும்,
ஒருநாள் கழிவதில்லாக் கடியுறறதும் உன்னியுன்னிப்
பெருநாள் கழிவனபோலும் கணததிற் பிழைப்பதுண்டேல்
திருநாள் கழிவதில்லாத தொண்டை நாடன்ன தேமொழிக்கே".
(தணிகைப் புராணம்.)

இவ் அருமைக் குறளை அடியொற்றி இது வந்துள்ளமை காண்க.

"வழிப்பட்ட கருமுகில்காள்! முற்பட்டென் வரவுரைமின், மலர்நதபுன்னை
கழிப்பட்ட புலவகற்றுங கடைஞாழல் மருங்கிரண்டு கயல்போல் நீண்ட
விழிப்பட்ட புனலுநதன் மெய்ப்பட்ட பசலையும் பொய்ப் பட்ட ஆழிச்
சுழிப்பட்ட விரறறளிரும் துயர்ப்பட்ட மனமுமுடைத தோகையாட்கே"
(திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம் 62.)

தான் மீண்டு வருங்கால் வழியிடை எதிர்ப்பட்ட மேகங்களை நோக்கித் தன் வரவை முந்துறப் போய் மனைவியிடம் விரைந்து சொல்லும்படி ஒரு தலைவன் இதில் வேண்டி யிருத்தலறிக.

பிரிந்துபோன தலைவன் தலைவியை விழைந்து விரைந்து வருவன் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை அனுவின் பால் உணரப்படும்.

கதை.

அனு என்பவன் சந்திரகுலத் தோன்றல். நபன் என்னும் அரசனுடைய அருமைத் திருமகன். அஞ்சாமை ஈகை ஆண்மை அறிவு அழகு முதலிய உயர்நலங்கள் யாவும் ஒருங்கமையப் பெற்றவன். இவன் பருவமெய்தி உருவவேளென மருவி நின்றபொழுது தன் தகுதிக்கேற்ற தருண மங்கையை அரச வருணங்களில் ஆராய்ந்து தெளிந்து முடிவில் அனுரதி என்பவளை மணம்புரிந்து கொண்டான். அவள் சுதன்மன் என்னும் சிற்றரசனுடைய அருமைத் திருமகள். அதிரூபவதி. அவளது இன்ப நலனை வியந்து பண்புபாராட்டி அன்புரையாடி இவன் ஆர்வமீதூர்ந்தான்.

"ஊன்றோய்த்தெடுத்து நிணம்பருகி ஒளிறுவடிவேற் றடங்கண்ணாள்
தேனறோய்த்த தெடுதத செங்கனிவாய்த்த தேறல் எளிதிற்பெற்றமையால்
மான்றேறிரவி கெடவிமைக்குஞ் சிந்தாமணியும் வளாநிதியும்
கான்றோய் தருவும் இநநிலத்தில் முபன்றால் கடிதிற் பெறலாமே; (க)
களவும் கொலையும் பயின்ற விழி கனியில் அமிழ்திற் கோறறேனில்
அளவுந தீஞ்சொற் படர்முலையாள் அழகுபூதத முகம்போலக்
குளனில் நதியில் தடஞ்சுனையில் கண்டதுண்டோ குளிர்வண்டீர்!
தளவம்பொதிநத குமுதமொடும் கழுநீரலர்நத தாமரையே?". (உ)

இன்னவண்ணம் பலவாறாக அவளது நலம்பாராட்டி எல்லியும் பகலும் இடைதெரியாமல் புல்லி மகிழ்ந்தான். அவளும்உள்ளமுருகி உழுவலன்போடு தழுவியிருந்தாள். தம் பெயரியல்பிற்கேற்ப மதனும் இரதியும்போல் ஒருவாதுவந்து உளங்களிகூர்ந்து பருகு காதலுடன் மருவி வருங்கால் மறுபுலந்தன்னில் அருவினை கருதி ஒருமுறை இவன் பிரிவுற நேர்ந்தான். அதில் பருவரல் கூர்ந்து அவள் மறுகியிருந்தாள். கருதிய கருமம் முடியாமையால் திஙகள் ஒன்பது சென்றும் இவன் திரும்பாது நின்றான். கணம் ஓர் ஊழியாக் கழித்து வழிமேல் விழிவைத்து நாளும் இவனையே நாடி அவள் நைந்து கிடந்தாள். அவளது அலமாலை நோக்கி அயலவரும் இரங்கினர். 'சின்னஞ்சிறியளான இவளைத் தன்னந்தனியே விடுத்து இன்னமும் வராமல் நம்மன்னன் நின்றுள்ளது என்ன

நீதி?' என இன்னவாறு ஊரவர்பேச அவள் ஊறுபட்டிருந்தாள். இவன் தினமும் அவளையே நினைந்து தியங்கியிருந்தான். அவளது இயலையும் செயலையும் எண்ணி எண்ணி மயல்மிகுந்து மறுகி அயல்பிரிய நேர்ந்ததே! என்று துயருழந்தயர்ந்து விதியை நொந்து ஒரு நாள் இவன் வெகுண்டு புலம்பினன்.

"நறையொழுகுங் குழலாளை, அமுதொழுகு மொழியாளை, நயனவேலிற் பிறையொழுகு நுதலாளைப் பிரிந்திருக்க இப்பிறப்பிற்பெரிதும் யான்செய் குறை எதுவோ? மதன்கணைக்குமிகவருந்த எனைவிதித்த கொடியோனன மறையவனும் கலைமகளைப் பிரிந்திருந்தால் தெரியுமிந்த வருத்தந்தானே"

இங்ஙனம் வருந்தியிருந்த இவன் முடிவில் விரைந்தெழுந்தான். ஆண்மகனன நானே இவ்வாறு அல்லற்படின் பெண்மகள் என்ன பாடுபடுவாளோ? என எண்ணி இரங்கினன். நாழிகை ஓர் ஊழியா யோங்கி யிருக்கும் ஆதலால் இனி இங்குக் கணமு நிற்கலாகா தென்று தேரூர்ந்து கடிது வந்தான். மனை புகுந்தான். இவனைக் கண்டவுடனே அவள் உளம்பூரித்து உவந்து தழுவி உயிர் தளிர்த் தாள். தான் கருதிவந்தபடியே பிரிவில் அவள் மறுகியிருந்ததை யறிந்து இவன் மனமிகவுருகினன். "சேண்சென்றார் வருநாள் வைத்து ஏங்குபவர்க்கு ஒருநாள் எழுநாள்போற் செல்லும்" என்பதை உலகம் காண இவன் உணர்த்தி நின்றான். திங்கள் சில கழிந்தபின் அவள் ஓர் மைந்தனைப் பெற்றாள். அவனுக்கு ஆனகத் துந்துமி என்று பெயர். அடியில் வருவது காண்க.

"உருமென விடிக்கும் பெருங்குரல் வேழத்தினமருப்புழுதிடுந் தழும்பும்,
அரிவையர் முலைக்கோட் டழுந்திடுந் தழும்பும் ஆரமும் அணிந்திடுமார்பன்
பொருவருதடந்தோள் அநுவின் நன்மைந்தன் புலால்கமழ்ந்தரத்த
[நீரொழுகி
எரியுமிழ்ந்திலங்கும் அலங்கிலை நெடுவேல் ஆனகத்துந்துமி என்பான்".
(கூர்மபுராணம்)

இவனது வீறும் சீரும் பேறும் பிறவும் இதனல் இனிது புலனும்.

காந்தம் இரும்பைக் கவரும் எனதுள்ளம்
காந்தை கவரும் கனிந்து.

காதலன் மனைநினைந்துவந்த நிலை இதனல் கூறப்பட்டது.

1270. உள்ளி யுடையுமென ஓர்ந்தேனோ கிள்ளிமுன்னங்
கொள்ள விரைந்தான் குமரேசா—அள்ளிப்
பெறினென்னும் பெற்றக்கால் என்னும் உறினென்னும்
உள்ள முடைந்துக்கக் கால். (ம)

இ—ள்.

குமரேசா! நினைந்து நினைந்து மனைவி நெஞ்சுடைந்து போம் என்று கிள்ளி ஏன் நெடிது விரைந்தான்? எனின், உள்ளம் உடைந்து உக்கக்கால், பெறின் என் ஆம்? பெற்றக்கால் என் ஆம்? உறின் என் ஆம்? என்க.

உக்கக்கால் = இறந்து பட்டபின். உகுதல் = கழிதல், அழிதல். "இன்மயிர் உகுக்கிய இருந்த தோகைய" (சிந்தாமணி 2636); "உண்ணாது உகத்தேன" (மலைபடுகடாம் 148); "உக்கு விடும் என்னுயிர்" (நெய்தற்கலி 21); "உக்கவர் ஒழிதர உயிருளோரெலாம்" (இராமா, நிகும்பலை 58); "ஒழுகுபு சோர்ந்தாங்கு உக்கது என்னெஞ்சு" (பெருங்கதை 1, 33, 132). இவற்றுள் உக்கல் உணர்த்திநிற்றல் காண்க. கால் வினையெச்சவிகுதி.

பெறில் என்றது கண்ணாரக் காணப் பெறுதலை. பெற்றக் கால் என்றது கண்டு கைக் கொள்ளுதலை. உறின் என்றது ஒன்றித் தழுவுதலை. உறல் = பொருந்தல். உடைந்து என்றது நிலைகுலைந்து உலைதலை. உகுதலுக்கு முன் நிகழ்வ தாகலான் முதலில் நின்றது.

மேல், பிரிந்துள்ள மகளிர்க்கு ஒருநாள் எழுநாளபோல் நீளும் என்றான்; இதில், தன்மனைவி மனமுடைந்து போவளே என்று மறுகி எழுந்தான்.

மனைவி உள்ளமுடைந்து ஒழிந்துபோயின் பின்பு நாம் போய்ப் பெறினும், பெற்றடைந்தாலும், உற்றணைந்தாலும் யாது பயன்? என்பதாம்.

தன்னை நினைந்து நினைந்து நெடுந்துயரால் மனைவி நெஞ்சு உடைந்து நிலை குலைந்து போவள்; அங்ஙனம் போகாதபடி நாம் விரைந்து புகுந்தருளவேண்டும் என்று வினைமேல்போன தலைவன் விழைந்தெழுந்த படியிது.

வினைவயின் மூண்டு நின்றபொழுதும் மனைவியை நினைந்து காதலர் மறுகிவருவர் என்பது இதனால் அறியநின்றது.

"உண்ணினல்லன உண்ணலள்; சாந்தமும்
தண்ணந் தாரும் தணக்கிற் புனையலள்;
கண்ண கன்றிடிற் காமரு சாயல் அம்
பெண்ணணங்குயிர் பெற்றிட வல்லளோ? (க)

பாடு கிள்ளைப் பனிமொழி கேட்கிலள்;
ஆடு தோகையின ஆடலும் காண்கிலள்;
வாடின் வாடும்; மகிழின மகிழும், நான்
வீடின எங்ஙனம் மெல்லியலுய்வளே? (உ)

நெஞ்சு நொந்து கணம் என்னை நீங்குறின்
அஞ்சு வெண்பிறைத தீச்சுடல் ஆற்றலள்;
அஞ்சின் யான் மதிச் சூடு பொறுத்திவண்
வஞ்சி எங்ஙன் உயிரொடு வாழ்வளே?" (பாகவதம்) (ங)

இவை, போரில் உயிர்விட நேர்ந்தபொழுது தன் மனைவியை நினைந்து புரஞ்சனன் என்னும் அரசன் புலம்பியன என்க. சாதல் நிலையிலும் காதலியின் நினைவு மீதூர்ந்து காதலன் மறுகி அயர்வன் என்பது இதனால் இனிதுபுலனும்.

வினைமேலகன்ற தலைவன் மனைவி நிலையை நினைந்து விரைவில் வருவன் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கிள்ளிபால் உணரப்படும்.

கதை.

கிள்ளி என்பவன் உறையூரிலிருந்து அரசுபுரிந்த சோழ மன்னன். சிறந்தபோர்வீரன். பெருங்கொடையாளன். நலங்கிள்ளி சேட்சென்னி என இவன் விளங்கி நின்றான். இவனுடைய அருமை மனைவி பெயர் மானவி. எழில் நலங்களில் அவள் மிகவும் சிறந்தவள். "வானவர் மகளிரும் வடிவழகமைதியில், மானவியோடெதிர் மானுவரோ?" என மாநிலம் புகழ அவள் மருவியிருந்தாள். அப்பேரழகியுடனமர்ந்து பெரும் போகங்களை நுகர்ந்து அறம் பலபுரிந்து இவன் ஆட்சிசெய்து வந்தான். எருங்கால் குறும்பர் சிலர் அரும்பி ஆங்காங்கு இடர்செய்து நின்றார். அத் தெவ்வரை யடக்கி வரச் சேனைகளுடன் இவன் செல்ல நேர்ந்தது. இவனைப் பிரிந்திருக்க முடியாமல் மனைவி வருந்தி யயர்ந்தாள்.

விரைந்து வருவன் என உவந்து தழுவி உறுதி கூறிவிட்டு இவன் உடன்று சென்றான். அவள் தனியே கவன்று தளர்ந்துகிடந்தாள். துணைபிரிந்த அன்றில்போல் துடித்தலமந்து படித்தலமேபாயலாய்ப் பரிந்துகிடந்த அவளைத் தோழியர் தேற்றி ஆனவரையும் போற்றி ஆறுதல் கூறியும் ஆற்றாதுழந்தாள். கண்ணுறக்க மின்றிக் காதலனையே நினைந்து சாதல்நிலையிலுள்ள தனது நோதல்நிலையை யாரும் அறிந்திலர்என அவலமீதூர்ந்துதெய்வம்பராவித் தேம்பிநொந்தாள்.

"இங்கணையும் ஒருகணைவிட்டு இருகணையும் துயிலவொட்டாது இரவெல்லாம் வநது ஐங்கணைவேள் பொருவதெல்லாம அறுகணை வேணியன் அறிவான்; யாரை நோவேன?"

என இவ்வாறு பேரஞரோடு புலம்பி அவள் பேதுற்றிருப்பப் பிரிந்துபோன மன்னன் பொருந்தலரைவென்று பெரும் புகழ் பெற்றுப்பாசறையில் பொருந்தியிருந்தான். தீயோரைத் தேய்த்து நல்லோரைக்காத்து மீட்டும்பகை எழாவண்ணம் நாட்டி நலங்கருதிச் சிலகாலம் அங்கோர் தலைநகரில் இவன் தங்கி நின்றான். இவனது வெற்றித் திறம் எங்கும் வியந்து பேச நின்றது. ஒன்று அடியில் வருவது காண்க.

"கொண்டைக் கூழைத் தண்டழைக் கடைசியர்
சிறுமாண் நெய்தல் ஆம்பலொடு கட்கும்
மலங்குமிளிர் செறுவில் தளம்புதடிநது இட்ட
பழன வாளைப் பரூஉக்கட் டுணியல்
புதுநெல் வெண்சோற்றுக் கண்ணுறை யாக
விலாப்புடை மருங்கு விசிப்ப மாநதி
நீடுகதிர்க் கழனிச் சூடுதடு மாறும்
வன்கை வினைஞர் புன்தலைச் சிறாஅர்
தெங்குபடு வியன் பழம் முனையின், தநதையர்
குறைக்கண் நெடும்போர் ஏறி விசைத் தெழுந்து
செழுங்கோட் பெண்ணைப் பழநதொட முயலும்
வைகல் யாணர் நன்னாட்டுப் பொருநன்
எஃகு விளங்கு தடககை இயல்தேர்ச் சென்னி
சிலைத்தார் அகலம் மலைக்குநர் உளரெனின்,
தாமறிகுவா தமக் குறுதி; யாம் அவன
எழுவுறழ் திணிதோள் வழுவின்று மலைந்தோர்

வாழக் கண்டன்றும் இலமே; தாழாது
திருந்தடி பொருந்த வல்லோர்
வருநதக் காண்டல் அதனினும் இலமே." (புறம் 61)

இது, இம்மன்னனைக் குறித்து மதுரைக் குமரனார் என்னும் புலவர் பாடியது. வயல்களில் நெய்தலும் ஆம்பலுமே களைகளாக வுள்ளன; தழையுடை உடுத்தகடைசியர் அவற்றைக் களைந்தெறிவர்; அங்கு மலங்கு மீன்கள்உழலும்; சிறுவர்கள் வாளைமீன்களைப் பிடித்துச் சமைத்து வெண்சோற்றோடு விலாப் புடைக்கத் தின்று இளநீர்களை வேண்டாமென்று வெறுத்து, வைக்கோற்போரின் மீதேறிப் பனம்பழங்களைப் பறிக்க முயல்வர்; நாளும் புது வருவாயையுடைய அத்தகைய வளமிக்க நல்ல நாட்டுக்குத் தலைவனாய் வேலொடு விளங்கும் சேன்னியுடன் எதிர்த்தவர் அதனால் நேரும் துயரங்களை அவரே அறிவர்; அவனைப்பகைத்தவர் யாண்டும் வாழ யாம் கண்டிலம்; அவன் சரண்புகுந்தவரே என்றும் இன்புற்று வாழக் காண்கின்றேம்; என இதில் அவர் உரைத்திருத்தல் காண்க. இதனால் இவனது நிலவளம், நீர்வளம், நிதிவளம், குடிவளம், அடங்கலரை அடுதல், அடைந்தாரை ஆதரித்தல் முதலிய உயர்நலங்களெல்லாம் இனிது புலனும். இங்ஙனம் வினைமுடித்து மேன்மையோடு விளங்கியிருந்த இவன் முடிவில் மனைவியை நினைந்தான்; சிறிது பிரியினும் பெரிதும் கவல்வளே! இந்நெடும் பிரிவை எவ்வாறு ஆற்றுவள்! நம்மை எண்ணி யெண்ணி அவள் மனமுடைந்து போயின் பின்னர் நம் வாழ்க்கை என்னும்? அன்றே இன்னே போகவேண்டும் என விழைந்தெழுந்தான்; விரைந்து தேர்விடும்படி பாகனை நயந்து தூண்டிநகரடைந்து மனைபுகுந்தான். நிலைகுலைந்து கிடந்த அவள் இவனைக் கண்டவுடனே களித்தெழுந்தாள். இவன் ஆரத்தழுவி அருள்புரிந்தான். அவள் ஆவிகுளிர்ந்து இன்புடன் மேவியிருந்தாள். நாயகி உள்ளமுடைந்துபோவள் என உள்ளிரங்கிப் பிரிந்த நாயகன் விரைந்து வருவன் என்பதை உலகம் காண இவன் உணர்த்தி நின்றான்.

உற்ற பசியால் உயிருலைந்த பின்னுணவு
பெற்றதனல் என்ன பயன்.

தலைவன் உளமுருகி வந்தமை இதனால் கூறப்பட்டது.

இவ் அதிகாரத்தின் தொகைப்பொருள்.

தலைவன் வரவையே இடையறாது எதிர்பார்த்திருந்ததனால் தலைவியின் கண்கள் ஒளி குறைந்தன; நாள் எண்ணி விரல்கள் தேய்ந்தன. அவரை நினையாதொழியின் நீளெழில் சிதையும். நினைந்திருத்தலினாலேதான் உயிர் நிலைத்துள்ளது. நினைந்த நெஞ்சம் நிமிர்ந்தேறுகின்றது. அவரைப் பார்த்த பின்புதான் பசப்பு நீங்கும். இன்பம் ஓங்கும். களிப்பு வளரும். வினைமுடிந்தவுடன் தலைவன் மனைவரவிரைவன். பிரிவில் ஒருநாள் எழுநாள் போலாம் என உளமிக உளைவன். பருவம் தவறாமல் பரிந்துவந்தடைவன் என்பதாம்.

௱உ௭-வது அவர்வயின் விதும்பல் முற்றிற்று.

128-ம் அதிகாரம் குறிப்பறிவுறுத்தல்.

அஃதாவது தலைவி, தலைவன், தோழி என்னும் இவர் தம் குறிப்பினை ஒருவர்க்கு ஒருவர் அறிவுறுத்தல். உறுத்தல் = உள்ளத்து அழுந்த உணர்த்தல். இது, பிரிந்துநின்ற தலைவன் விரைந்து வந்தடைந்தபின் விழைவு மிகுதியால் நிகழ்வதாகலின் அவர் வயின் விதும்பலின் பின் வைக்கப் பட்டது. கக0-ம் அதிகாரத்தில் குறித்த குறிப்பறிதலுக்கும், இதற்கும் வேறுபாடு என்னை? எனின், அது களவு நிலையில் தலைமகள் நிலையைத் தலைமகன் தனிநின்றறிதல்; இது, கற்புநிலையில் கலந்துநின்று கருத்தை உணர்தல் என்க.

1271. காமர் கனகங் கரந்தும் அவள்கண்ணால்
கோமகனேன் கண்டான் குமரேசா—காமம்
கரப்பினுங் கையிகந் தொல்லாநின் னுண்கண்
உரைக்க லுறுவதொன் றுண்டு. (க)

இ—ள்.

குமரேசா! தன் காமக் குறிப்பைக் கனகம் மறைத்தும் அவள் கண்ணால் ஏன் கணவன் அறிந்து கொண்டான்? எனின், கரப்பினும் கை இகந்து ஒல்லா நின் உண்கண் உரைக்கல் உறுவது ஒன்று உண்டு என்க.

இது, தலைவியின் குறிப்பையறிந்து தலைவன் உரைத்தது. கரத்தல் = மறைத்தல். இகத்தல் = கடத்தல். ஒல்லா = நில்லாமல்.

கை இகந்து ஒல்லா என்றது கைகடந்து மீறி என்றவாறு. அவள் அடக்கிநின்ற திறம் இதனால் அறிய நின்றது.

ஒன்று உண்டு என்றது ஒரு காரியம் உள்ளது என்றவாறு. அஃதாவது தான் பிரிந்துபோவன் என்று அவள் நினைந்து கொண்டது.

நீ சொல்லாது மறைத்தாலும் நில்லாதெழுந்து நின் அழகிய கண்கள் சொல்லலுறுவதான காரியம் ஒன்று உள்ளது அதனை யான் உணர்ந்துகொண்டேன் என்பதாம்.

வினைமேல் அகன்றுசென்ற தலைவன் திரும்பிவந்து மனை கலந்து வாழுங்கால் மறுபடியும் பிரிந்துபோவனோ? என்று ஒரு நாள் மனைவி கலங்கி நின்றாள். அந்நிலையினைக் குறிப்பானறிந்து அவளிடம் அவன் உரைத்தபடியிது.

தன் கலக்கத்தை நாணால் மறைத்தும் அவளுடைய கண் பார்வையால் அதனை இவன் காண நேர்ந்ததாதலால் "கரப்பினும் நின்கண் உரைக்கலுறுவது" என்றான். உரைக்கும் இயல்பில்லாத கண் உரைக்கும் என்றது உபசாரம். தான் உணர்ந்து கோடற்கு உதவியாய் நின்றமையால் உயர்நிலையில் அலங்காரந் தோன்ற இங்ஙனம் உரைத்தான் என்க. "பகைமையும் கேண்மையும் கண் உரைக்கும்"(குறள் 709); "ஒருவன் முகன் உரைக்கும் உண்ணின்ற வேட்கை" (நான்மணிக்கடிகை 70). இவற்றுள் கண்ணும் முகமும் உரைக்கும் என வந்துள்ளமை காண்க. உரைத்தது என்னாது உரைக்கலுறுவது என்றது அத்தொழில் நிகழ்ச்சியின் தொடர்ச்சி கருதி.

நெடுநாளாகப் பிரிந்து அடைந்தமையால் காதல் மிகுந்து கனிந்து தழுவி முயங்கி யெழுந்த பின் நாளும் நலம் பாராட்டி முகந்தடவிக் குழல்முடித்து முதுகு தைவந்து கண் மை நீவித் தொய்யிலெழுதி இனியன பல செய்தான்; செய்யவே இவ்வாறு அளவுமீறிச் செய்கின்றமையால் மீண்டும் பிரிந்துபோவாரோ? என்று அவள் நினைந்து கவன்றாள்; அக்கவலையைக் குறிப்பாலறிந்து

கொண்ட இவன் இனி யான் என்றும் பிரியேன்; யாதும் ஐயுறேல்; என அளிசெய்தருள்வன் என்க. பிரிந்துவிடுவரோ என்று உருக்குமணி எண்ணி அயர்ந்தபொழுது அதனைக் குறிப்பாலறிந்த கண்ணன் அப் பெண்மணியைத் தேற்றியிருக்கும் நிலையை அடியில் பார்க்க.

"ஐதேய்ந் தல்குற் கலைதிருத்தி, அம்மென் முலைதாழ் வடஞ் சேர்த்தி,
மைதாழ் கூந்தல் கமழ முடித்து, அயில்வேலுண்கண் மையெழுதி,
வெய்தா மனைபோற் கை செய்தேன்; ஐயுற்றுள்ளம் மெலிவுறேல்;
பைதாழல்குல் வேய்மென்றோட் பவளத்துவாவாய்ப் பசுங்கொடியே! (க)
பரிவுறவுரைப்ப நுதல் பசலை பூத்த தென்சொல்? பணிமொழியாய்!
பிரியேனினைப், பிரியிலுயிர் உய்யேன; எனவுப் பெய்வளையைப்
புரவித்தடந்தேர் மிசையேற்றிக் கண்ணன போரேற்றிடும் அரசர்
வெருவவரி வெஞ்சிலை குழைத்துத்தம்முனோடும் விரைந்தகன்றான்." (உ)

(கூர்ம புராணம்)

கண்ணன் புனைந்து புகழ்ந்ததும், உருக்குமணி நினைந்து கவன்றதும், அக்கருத்தைக் குறிப்பாலறிந்து ஆற்றியருளி அவளை அவன் அணைந்துகொண்டதும் இதில் ஊன்றி யுணர்ந்துகொள்க.

நாயகி நெஞ்சுள் எண்ணியதை அவள் கண்ணால் நாயகன் உணர்ந்துகொள்வன் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் வுண்மை கனகம்பால உணரப்படும்.

கதை.

கனகம் என்பவள் மனுமான் என்னும் மண்டலீகனுடைய அருமைத் திருமகள். ஒளிவளர் உருவினள். உயர்நலமுடையவள். தன் பெயர் நிலைக்கேறப் பொன்னொளி மேனியளாய்ப் பொருந்திக் கன்னிமை காத்துக் கனிந்து நின்றாள். பருவங்கடந்து உருவஞ் சிறந்து எழில்மிகுந்திருந்த இவள்மேல் ஆசைமீக்கூர்ந்து அரசிளங் குமரர்கள் பலர் ஊசலாடி நின்றார்.

"வனசரோருகம் நீங்கியும் மன்னாதம்
மனசரோருகம் நீங்கலள் மனனெழிற்
கனகம் எனனும் இககனியைக கைககொள
அனக மாதவம் செய்தவன் யாவனோ?"

என இவளது நிலைமையை வியந்து மணவினையை நயந்து நகரமாந்தர் யாவரும் ஆவலோடிருந்தனர். காவலனும் இவள் தகுதிக்கு ஒத்த வரனைப் பகுதிதோறும மிகுதியும் ஆராய்ந்து வந்தான்.

"காதலால் அறிவது காமம்; காதலே
ஏதிலார் உணர்வினால் எண்ணலாவதன்று;
ஆதலால், மாதராள் திறத்தின் ஆணை நூல்
ஓதினார் உரைவழி ஒட்டற் பாலதே."

என்று அறிஞர்களுடன் ஒட்டி உசாவினான். இவ்வாறு உசாவி வருங்கால் சிங்ககேது என்னும் அரசிளங்குமரன் ஒரு நாள் இம் மங்கையைக் கண்டான். அவன் சிறந்த மதிமான். கனகபல்லவம் என்னும் நகரிலிருந்து அரசுபுரிகின்ற மனுதரன் என்னு மன்னவனுடைய அருமைத் திருமகன். அரும்பெறலழகும் பெரும்போர் வீரமும் ஒருங்கமையப்பெற்றவன்.

"கற்றவா புகழுஞ் சீர்த்திக் கனகபல்லவத்தை ஆளும்
கொற்றவன் சிறுவன் கோலக் குங்குமக் குவவுத் தோளான்;
செற்றவர்ச் செகுக்குஞ் செய்கைச் செருவல்லான சிங்ககேது
மற்றவன் பிறந்தபின்னை மண்மகள் மகிழ்ந்த தென்றான."
(சூளாமணி)

இங்ஙனம் இசைமிகுந்து நின்ற அவன் இவளைக் கண்டவுடனே காதல்மீக்கொண்டான். இவளும் அவன்மேல் மையலாகி மறுகி நின்றாள். அதனபின் உலகமறிய மணந்து இவளை உவந்துகொண்டு போய் உயர்ந்தபோகங்களை நுகர்ந்து அவன் உளமகிழ்ந்திருந்தான்.

"குமிழ்மிசை மறிந்து மீண்டு குழைபொருதலைக்குங் கண்ணாள்
அமிழ்துறழ் பவளவாயின் அருந்ததியிற் குறித்த தூய
கமழ்திரை அமுத மாந்தப் பெற்றதால் புலவு காலும்
இமிழ்திரை அமுத முண்ட புலவரோ என்னை நோவார்?"

என இன்னவாறு இவளது இன்பநலனை வியந்து அன்புபாராட்டி நாளும் அவன் ஆர்வமுற்று வந்தான். ஒருமுறை சிந்துநாட்டில் நிகழ்ந்த செருமுனைக்கு அவன் செல்ல நேர்ந்தது. அப்பிரிவில் இவள் அல்லலுற்றிருந்தாள். அவன் ஒல்லையில் மீண்டு இவளை உவந்து புல்லி நயந்து பேணி நின்றான். நின்றும் மீளவும் பிரிந்து போம்கொல்? என்று நீளவும் நினைந்து நாளும் உளைந்து நைந்து கவன்றாள். தன் கவலையை வெளிப்படுத்தாதிருந்தும் இவள் கண் மறுகி நிற்றலை அவன் குறிப்பாலறிந்தான்; யான் இனி யாண்டும் பிரியேன் என இவளை ஆரத்தழுவி அவ் ஆணடகை ஆற்றியருளினான். "கரப்பினும் நின்ன உண்கண உரைப்பதொன்றுண்டு" என்பதை உலகம் இவள்பால் உணர்ந்து நின்றது.

உள்ளியதை யுன்கண்ணால் ஓர்ந்தேன் இனியுன்னைத்
தள்ளி யகலேன் தனித்து.

கண்ணின் குறிப்பு இதனால் கூறப்பட்டது.

இந்நூல் முழுவதுக்கும் முன் தொகை செலுத்திப் பூரண சந்தாதார்களாய்ப் பொருந்தியுள்ள பெருந்தகையாளர்கள்.

வரிசை நிர்.

253 ஸ்ரீலஸ்ரீ அர்த்தநாரி சுவாமிகள், காட்டுப்புத்தூர், திருச்சி. Dt.

254 ஸ்ரீமான் R. மாணிக்க முதலியார் அவர்கள், உன்னியூர் ,,

255 ஸ்ரீமான் Dr. மதுரம் அவர்கள், குரு மெடிகல் Hall. ,,

256 ஸ்ரீமான் பாலகிருஷ்ணனவர்கள் Doctor பெருவளப்பூர் ,,

∴ ∴

அபிப்பிராயங்கள்.

புள்ளம்பாடி இராமசாமியார் இயற்றியது.

அயனறைந்த நெறியறிந்து சீர் கதித்த கந்தனைமுத் தழைததுச் சால
நயனிறைந்த கதைகள் சேர்த் தித்தரையில் கற்றவர்கள் நடலை தீர
இயல்செறிந்த தண்ணளியா லினிதளித்தான் குமரேசவெண்பா என்னும்
பெயருயர்ந்த ஒரு நூலைச் செகவீரபாண்டியனும் பெருமான் மன்னே.

Rao Sahib ஸ்ரீமான் வே. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள்

G. B. V. C. இயற்றியது.

வள்ளுவர்முன் சொல்லியுள்ள வண்குறள்கட் கெல்லாமெய்
யுள்ள கதைகளைநன் குய்த்துணர்ந்து—கொள்ளப்
பகர்வேள் கவிராஜ பண்டிதனென் றோதும்
செகவீர பாண்டிய வேந்தே.

அரிய நூல்!   உ   இனிய உரை!

சிவமயம்.

திருக்குறட் குமரேச வெண்பா

(மூலமும்—உரையும்).

இந்நூல் திருக்குறள் என்னும் தெய்வ நூலை மருவிச் செய்யப்பெற்ற ஓர் அருமையான பெரிய புதிய நூல். ஆயிரத்து முந்நூற்று முப்பது அரிய குறள்களுக்கும் உரிமையான உண்மைச் சரிதங்களைத் தெளிய உணர்த்துவது. கதைகளைக் குறள் வெண்பாவிலமைத்துக் குமரேசனை முன்னிலையாக் கொண்டு திருக்குறளோடிணைத்து இந்நூல் செய்யப்பட்டுள்ளது. இனிய நடையில் தெளிய எழுதிய சிறந்த உரையோடு திருந்திய கதை விளக்கமும் பொருந்தி யுள்ளது.

பழைய உரைகளைக் கொண்டு எளிதில் அறிய முடியாத குறளின் நுணுகிய பொருள்களெல்லாம் இதனால் இனிது தெளியலாம். இலக்கியச் சுவைக்கும் இலக்கண நிலைக்கும் இஃதோர் இலக்காயுள்ளது. இவ் ஒரு நூலுணர்ச்சியே அரிய பல நூல்களின் பயனையும் இனிது உதவுமென்பதை இதனைப் பெற்றபின் எவரும் முற்றவும் தெளிவர்.

இந்நூல் எல்லார்க்கும் எளிதாகப் பயன்படுமாறு 1100ம்-ௗ (15-9-24) ஆவணி தொடங்கி மாதந்தோறும் தனித்தனிப் புத்தகங்களாக உயர்ந்த பதிப்பில் வெளிவருகின்றது. வேண்டியவர்கள் இதனடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதிக் கொள்ளுக.

இதன் வருடச்சந்தா	ரூ	4—0—0
1,2,3,4,5,6,7,8,9,10,11,12 தொகுதிகள் தனித்தனி	ரூ	4—0—0
அறத்துப்பால் முழுவதும் 800 பக்கம் அழகுறப் பைண்டு செய்தது	ரூ	8-12—0
பொருட்பால் முதற்பாகம் 800 பக்கம் அழகுறப் பைண்டு செய்தது	ரூ	8-12—0
பொருட்பால் இரண்டாம் பாகம் 800 பக்கம் ,,	ரூ	8-12—0
பொருட்பால் மூன்றாம் பாகம் 1130 பக்கம் ,,	ரூ	10-12—0
காமத்துப்பால் அச்சிலுள்ளது	ரூ	11—4—0
அகத்திய முனிவர்	ரூ	1—0—0

விலாசம்:—மானேஜர், திருவள்ளுவர் நிலையம்,
தூத்துக்குடி.